437

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௧௦.] பரிதாபி ஸ்ரீ ஆனிமீ [பகுதி-அ.

உள்ளுறை.

ஐயவினாவின் விடையுரை:—பத்திராதிபர்.	௩௫௭
சுதர்மகலாவதீயம்:—திரு. நாராயணையங்கார்.	௩௬௨
நச்சினார்க்கினியர்:—ஸ்ரீமத்-எஸ் சாமிநாதையர்.	௩௬௫
குவனி:— ,, ச. பூபாலபிள்ளை.	௩௭௦
வெள்ளியந்திருமலைகிழார்:— ,, ச கந்தையபிள்ளை.	௩௭௬
சூரியசித்தாந்தம்:— ,, சோமசுந்தரதேசிகர்.	௩௭௭
'ராவ்சாஹிப்' பட்டம்:— ,, வே. முத்துஸாமி ஐயர்.	௩௮௧
இரங்கற்பாக்கள்:— ,, ச. பூபாலபிள்ளை.	௩௮௫
பக்திவைபவம்:— ,, வி. தி. ஸ்ரீநிவாஸையங்கார்.	௩௮௮
புத்தகவரவு:—பத்திராதிபர்.	௩௯௬
திருமந்திர நூறுபாட்டுக் குரை:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்.	௧௭
மாறனலங்காரம்:—பத்திராதிபர்.	௧

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

438

உ

விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியா விஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங்களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிராயமெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதனபுஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப்பத்திரிகை விஷயமாய் ஏற்படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகையறுக்களையும், ஷை தமிழ்ச் சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளையும், தமிழ்ச்சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய ஸகல தகவல்களையும் பற்றி எழுதிக்கொள்ளவேண்டியவர்கள் நாளது தேதிமுதல் ஷை தமிழ்ச் சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

T. A. Subbuvenkatarama Aiyer,

Manager.

பிழைதிருத்தம்

பரீதாபி-௵ வைகாசி௴த்திய "சேந்தமிழ்"சஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருக்கும் வரவு செலவுகணக்கின் "Audited and found correct" என்னும் சொற்களுக்குக்கீழாக "V. Sundaram Aiyer, என்று அச்சிடப்படுவதற்கு பதிலாக கைத்தவறுதலால் "S. Gopalaswami Aiyengar" என்று அச்சிட்டிருப்பது பிழையாகும்.

T. A. SUBBUVENKATARAMA IYER,

Manager.

439

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-க0.] பரீதாபி ௵ ஆனி ௴ [பகுதி-அ.

ஐயவினாவின் விடையுரை.

"“செந்தமிழ்”ப்பத்தாந்தொகுதியின் நான்காம் பகுதியில் “ஐயவினாத்தொடர்” என்ற தலைப்பின்கீழ்ச் சில இலக்கண விலக்கியங்களில் ஒரு மாணவர் தமக்குத் தெளிவுபெறாதபொருள்களைத் தெளிவுபெறுமாறுணர்த்தவேண்டுமென வினவித் தம்போல்வார் பலர்க்கும் பயன்படும்படி கற்ற பண்டிதர்கள்கண்டு செந்தமிழில் விடையளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளுடன் எழுதிய ஐயவினாக்கள் வெளிவந்துள்ளன.

அவற்றிற்கெல்லாம் முறையே சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களெழுதிய விடைமொழிகள் சென்ற சித்திரைமாதச் செந்தமிழில் வெளியிடப்பட்டன.

ஆயினும், அவை பொருளடக்கமுள்ளனவாயும், சுருக்கமுள்ளனவாயுமுள்ள சில சொற்களுடையனவாகி முடிவானபொருளையுணர்த்தி முடிந்துள்ளன. அவை, கற்றோரான் முற்றுமுணரத்தகுமாயினும் கல்விபயிலு மாணாக்கர்க்கு நன்கு விளங்காவாகலான், அவரும் அவற்றை நன்குணருமாறு விரித்து விளக்கிச் செந்தமிழில் வெளியிடவேண்டுமென்ற வேண்டுகோட்கிணங்கி அவற்றின் பொருளை விரித்தும் விளக்கியும் அவரதறிவு வளர்ச்சியைக் கருதியே சில விகற்பவகைவிடைகாட்டியும் இவ்வுரை வெளியிடப்பெறுவதாயிற்று.

முதலாவது வினா, "நன்னூற்காண்டிகையென்பதிற் காண்டிகையென்பது இடுகுறிப்பெயரா? காரணப்பெயரா? இவற்றுள் இன்னதெனவிளக்கல்வேண்டு" மென்பதே.

அதற்கு விடை, "இடுகுறி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. காண்டிகையென்பது இடுகுறிப்பெயரா? அல்லது காரணப்பெயரா? என்பது ஈண்டு ஆராய்ச்சிசெய்யத்தக்கது. இதற்கு இடுகுறி காரணக்குறி என்னு மிவற்றி னிலக்கணங்கள் இன்னவென்பதை முன்பு தெரிந்துகொண்டு பின்பு அவற்றை ஆராய்வது முறை.

அவற்றி னிலக்கண மென்னென வாராயுமிடத்து "இடுகுறி காரணப்பெயர்பொதுச்சிறப்பின" என்னும் நன்னூற்சூத்திரவிருத்தியுள் "ஒருபொருளைக்குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானுமிட்ட குறியாகிய பெயர் இடுகுறிப்பெய" ரெனவும், "காரணத்தானிடும்பெயர் காரணப்பெயர்" எனவும் இலக்கணங்கூறி இடுகுறிப்பெயர்க்கு மரம், பனை எனவும், காரணப்பெயர்க்கு அணி, முடி எனவும் உதாரணம் காட்டப்பட்டுள்ளன.

இவ்விலக்கணத்தாற் காரணங்கருதியிட்டபெயர் காரணப்பெயரெனவும், காரணங்கருதாதிட்டபெயர் இடுகுறிப்பெயரெனவும் கொள்ளல்வேண்டுமென்பது பெறப்படுகின்றது. அங்ஙனம் பெயரிடுவோ ரிடுங்காலத்து யாமுடனிருந்துணர்ந்தோமல்லோமாதலாற் காரணங்கருதியிட்டபெய ரிதுவெனவும், காரணங்கருதாதிட்டபெய ரிதுவெனவும் யாம் பகுத்துணருமா றெங்ஙனமெனில், தொல்லைநூலாசிரியரானும், உரையாசிரியரானும் காரணங்காட்டி விளக்கிய "நூல்" என்னும் பெயர்போல்வன காரணக்குறியென்றும், அங்ஙனம் காட்டி விளக்காதன இடுகுறியென்றும் கொள்வது முறையாகும்.

அம்முறையில் மரம் பனை என்னும்பெயர் காரணங்கூறப்படாமையால் இடுகுறியெனக்கொள்வதுபோலவே காண்டிகையென்னும் பெயரும் அப்பெயர்வந்த காரணங்கூறப்படாமையால் இடுகுறியென வழங்கத்தகுமென்பது துணிபு. இஃதொருதலை.

இனி இதன் விகற்பவகை வருமாறு:—

காண்டிகையென்னும்பெயர் சாத்தன் கொற்றன் எனக் கல்லா தாரிட்டுவழங்கும் உலகவழக்குச்சொற்போலல்லாது, கற்றோரானிட்டு வழங்கும் "நூல்" "விருத்தி" என்பனபோல நூல்வழக்குச்சொல் லாயுள்ளது. ஆதலா லஃ தேதேனு மொருபயன்கருதியிடப்பட்ட தாகவேண்டும்.

"இடுகுறியானுநூற்கெய்தும்பெயரே" யென்றமையான் இவ் வுரையும் நூலுறுப்பாதல்பற்றி இடுகுறிப்பெயர்பெறுதல் கூடுமாயி னும், காண்டிகையென்னும் பெயரோ டொத்துவழங்கப்பட்ட நூல், விருத்தி யென்னும் பெயர்கள் காரணக்குறியாயிருத்தலால் அவற் றிடையேவழங்கப்பட்ட காண்டிகையென்னும் பெயரும் காரணக்குறி யாயிருக்கக்கூடுமென்று தோன்றுகின்றது.

இது-காரணக்குறி. இது-இடுகுறி எனத்துணியுமிடத்து அவ யவ வாற்றலுள்ளதனைக் காரணக்குறியென்றும், சமுதாயவாற்றலுள் ளதனை இடுகுறியென்றும் கொள்வது முறை. இம்முறைபற்றியே பொருட்பெயர்முதலிய பெயரடியாகப்பிறக்கு மிருதிணைப்பெயருங் காரணக்குறியாகின்றன.

அம்முறையிற் காண்டிகையென்னும் பெயர் அவயவவாற்றலுள் ளதா? இல்லதா? வென ஆராயுமிடத்து முதலிற் காண்டிகையினிலக் கணத்தால் அஃ தின்னதன்மையுடையதென்பதையுணர்ந்துகொண்டு பின்பிதனை யாராயவேண்டும். தொல்காப்பியத்தில்,

> "பழிப்பில்சூத்திரம்பட்டபண்பிற்
> கரப்பின்றிமுடிவதுகாண்டிகையாகும்" எனவும்,

நன்னூலுள்,

> "கருத்துப்பதப்பொருள்காட்டுமூன்றினு
> மவற்றொடுவினாவிடையாக்கலானுஞ்
> சூத்திரத்துப்பொருடோற்றுவகாண்டிகை" எனவும்,

இலக்கணங்கூறப்பட்டமையாற் பதப்பொருளுரைத்தல், தாற்பரியங் கூறல், உதாரணங்காட்டல் என்னும் மூன்றுறுப்புக்களாலாயினும், இவற்றுடன் தடை விடைகளான் ஐயமறுத்துச் சூத்திரப்பொருளை

442

நன்குவிளக்கி ஐந்நூறுப்பாலாயினும் முடிவது காண்டிகையெனப் படுமென்பதாயிற்று. இதுவேயன்றி "உரையெடுத்ததன்முன்யாப் பினு" மென்னுந் தொல்காப்பியச்சூத்திரவுரையிற் "காண்டிகையினை விளக்குங்கருத்தினுனும் உரையெழுதலுண்டு" என்று கூறப்பட்ட மையாற் பிறிதோருரைக்குக் காண்டிகை மூலபாடமாவ துண்டென்ப தும் பெறப்பட்டது.

இதனால் உரையெழுதற்கேற்ற பொருளடக்கமுள்ள சுருங்கிய சொற்களாற்செய்யப்படுவது காண்டிகை யென்பதுதோன்றுதலா னும், ஐவகையுறுப்பும் நூற்பொருளுணர்ச்சிக்கு இன்றியமையா தன வாதலாலும் காண்டிகையுரைகற்போன் மூலபாடங்கற்பதுபோல வே ஏடுபாராது வாய்ப்பாடமாகச்சொல்லவல்லனுதல்வேண்டும். அங் ஙனங் கல்லானுயின் அவனுன் முறையானே நூற்பொருளுதணர்த லியலாதென்பது தெளிவாகின்றது. இவ் விலக்கணத்தானமைந்த வுரையை வடமொழிவாணரும் வாய்ப்பாடமோதி வரப்பண்ணிவரு கின்றனர். அங்ஙனம் மிடற்றெலியெழப்படித்து வாய்ப்பாடமாக வரப்பண்ணிய பாடத்தையே முகஸ்தம் (வாயிலுள்ளது) கண்டஸ்தம் (மிடற்றிலுள்ளது) எனப் பண்டிதர்கள் கொண்டாடுகின்றனர்.

இதனைக், கண்டத்திருந்து விளங்கியகல்வி பண்டிதர்களாற்கொண் டாடப்படுகிறது. ஏட்டிலுள்ள கல்வியா லறிவிலி யோட்டமெடுக்கின் றனன். என்னும் பொருளுள்ள,

"கண்டஸ்தாயாஶ்ச வித்யாயா ஸாக்ஷாத்காவ்யஸ்தாவேதயே: ।
யாம் ... த்ஸ்மே வித்யா தயா ... ஸாக்ஷாத்ருதே ॥"

என்னும் வடநூற்பனுவலாலுணர்க.

ஆதலால் நியமமாகக் கண்டத்தையுதவிக் கற்கத்தகும் உரை- காண்டிகை. என வடமொழித்தத்திதாந்தம்பெற்ற சொல்லாய் அவயவ வாற்றலுடையதாகக்காணப்படுகிறது. அதாவது 'ததஸ்மை தீயதே நியதம்' என்னும் (பாணிநீய வியாகரணம் 4-4-66) சூத் திரத்தின்படி (கண்டம் அஸ்மை நியதம் தீயதே காண்டிகா) கண்டம் இதற்கு நியதமாக வழங்கப்படுதலாற் காண்டிகை. எனக்கண்டமென்

னுங் கொடைப்பொருட்பெயரடியாகக்கொள்வோன்பொருட் டத்தித விகுதிபெற்று முடிந்த பெயர்ப்பகுபதமென்பதாம். இம்மொழியின் பகுபதவுறுப்பின் செய்கை வேறுபாடுகளெல்லாம் இங்குரைப்பிற் பெருகுமென விடுத்தமையால் அவற்றை வடமொழி வியாகரணம் வல்லார்வாய்க்கேட்டுணர்க. இனி வருவனவற்றிற்கு மிஃதொக்கும். இப்பொருளிற் கண்டத்தை நியமமாக வழங்குதல் என்பது, கருத்து வகையான் வழங்குங் குறிப்புமொழி. இக்குறிப்பினை வடநூலார் "பௌத்தம்" என்ப. அன்றியும், கண்டத்தைப்பற்றியிருப்பது காண்டிகை என்றற்றொடக்கத்து வேறுமுறையாகப் பொருள்கொள்ளவும் தத்திதாதிகாரத்தில் விதிகளுள்ளன. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்.

இங்ஙனங்கூறியவாற்றால் மிடற்றொலியெழப்படித்து வாய்ப்பாடமாக வரப்பண்ணத்தக்கது காண்டிகை என்பதுபோந்தபொருள். இதனால் வாய்ப்பாடமாக வரப்பண்ணவியலாது விரிந்து பரந்துகிடந்த விருத்தியுரையின் வேறுபட்டதென்பதும் விளங்கும். ஆதலாற்காரணக்குறியெனக்கொள்ளத்தகுமென்பது ஒருவகை.

இனி இவ்வகையன்றியே அணிகலவிசேடப்பெயராகிய கண்டிகையே காண்டிகை என உருவகம்பெற்றுத் தத்திதப்பெயராய் முடிந்ததென்பதுமொன்று.

இப்பொருளிற் கண்டிகை என்னுமணிகலன் - கழுத்திலணியுமணித்தாழ்வடம். அது மணிகண்டிகை மகரகண்டிகை என வழங்கும் அணிகலப்பெயரானும் அறியப்படும். அவ்வணிகலன் நெஞ்சினும் மிடற்றினும் நிலவத்தரிக்கத்தக்கது. அதுபோல இக்காண்டிகையும் நெஞ்சினும் மிடற்றினும் நிலவத்தரிக்கத்தக்கதென்பது பெறப்படும். இதனால் மனப்பாடமும் வாய்ப்பாடமுமாக வரப்பண்ணற்பாலது காண்டிகையுரை என்றவாறாயிற்று. ஈண்டு நெஞ்சு மிடறு என்பன உபசாரவழக்காய் மனமுந்தொண்டையுமாகிய வுள்ளுறுப்புக்களையுணர்த்தின. இவ்வாறு "நான்மணிக்கடிகை" என்னும் பெயர்க்குப் பொருளுரைக்குமிடத்துச் செவிப்பெயரால் அதனுள்ளுறுப்பாகிய சுரோத்திரேந்திரியம் உபசரிக்கப்படுதல் கண்டுகொள்க.

இங்ஙனம் கொள்ளுதலால் ஆசிரியர் காண்டிகை எனப் பெய ரிடுமுகத்தானே அதனை மனப்பாடமும் வாய்ப்பாடமுமாக வரப் பண்ணவேண்டுமெனக் கற்போர்க்கும் கற்பிப்போர்க்கும் கற்கு முறையும் கற்பிக்குமுறையுஞ்சொல்லி வற்புறுத்தினர் என்பதும் பெறப்படும்.

அன்றியும் "கற்றோர்க்குக் கல்விநலனே கலன்" என்பதுபற்றி இது கற்றோர்க்கு மணித்தாழ்வடம்போல அவைக்களத்து மதிப் பும் வனப்பும் அளிக்கும் எனப் பயனுணர்த்தினர் என்பதும் பெ றப்படும்.

இவ்வாறே நூல்களுக்கும் உரைகளுக்கும் அணிகலப்பெயரிட்டு வழங்குதலுண்டென்பது சூளாமணி, சப்தேந்துசேகரம், சப்தகௌஸ் துபம், நான்மணிக்கடிகை, ஸரஸ்வதீகண்டாபரணம், டீகா எனப் பிறரும் வழங்குமாற்றால் விளங்குகின்றது. ஆதலால் வடமொழி யிலக்கணங்கொண்டு தமிழ்த்தொல்லாசிரியர் படைத்திட்ட காரணக் குறியென்பது பொருந்துமென்பது மறுதலை.

காரணக்குறியாயின் மிடற்றொலியெழப்படித்து வரப்பண்ணத் தக்க வேதமுதலியவற்றிற்கும், மூலபாடங்களுக்கும் காண்டிகை யெனப் பெயர்வழங்கவேண்டுமேயெனின் அங்ஙனம் வழங்காமைக்கு முள்ளியென்பதன்கட்போல இதன்கண் இடுகுறியாற்றலு முண் டென்றுகொள்ளவேண்டும். வேண்டவே அவ்விரண்டனுள் இடுகுறி யாற்றல் வலியுடையதாதலால் ஒருதலை துணிதல்பற்றி இடுகுறி யென்று விடைகூறப்பட்டதெனக்கொள்க.

(தொடரும்.)

பத்திராதிபர்.

உ

சுதர்மகலாவதீயம்

பண்டைக்காலத்து நம் தமிழ்மொழியானது இயல், இசை, நாட கம் எனப் பகுக்கப்பட்டிருந்ததெனச்சொல்லும் முறையைக்கொண்டு பார்க்குமிடத்து மற்ற இரண்டு தமிழ்களினும் நாடகத்தமிழே மேற் பட்டிருந்ததாகக் காணப்படுகிறது. அவ்வாறிருந்த அது பிற்காலத்

தில் என்னகாரணத்தினலோ வளர்ச்சிகுன்றியதேயன்றித் தன்சொரூபமும் சிறிதுந் துலங்குதலின்றி யழிந்தொழிந்துபட்டிருப்பது தமிழுலகுக்கு ஒரு பெரிய குறையேயாம்.

அக் குறைதீர்க்கக் கருதி இக் காலத்துப் பண்டிதர்கள் பலரும் எழுதி வெளியிடும் நாடகங்கள் பலவும் உலகிற் பரவிவருகின்றன. அவற்றிற்கெல்லாம் உரையாணியாக விளங்கும் சுதர்மகலாவதீய மென்னும் இவ் வரிய தமிழ்நாடகமானது மதுரைவக்கீலும், வித்வத்பிரபுவும், தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனுதிபதியுமான ஸ்ரீமத் பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களால் வடமொழியிலக்கணத்தை மருவியதாகவும், உரையும் செய்யுளும் விரவியதாகவும் கற்பிதமாகவியற்றி வெளியிடப்பெற்றிருக்கிறது.

இந்நாடகம் அதற்கின்றியமையாத இன்பச்சுவையை முதன்மையுடையதாகவும், ஏனைச்சுவைகளை யுறுப்பாகவுங்கொண்டு பூர்விக மதாசாரங்களையும், கற்பு முதலிய நற்குணங்களையும் எவ்வித ஆபத்து நேர்ந்தகாலத்திலும் கைதவற விடலாகாதென்பதை யுணர்த்திப் பண்டிதர் பாமரரெல்லோரும் கண்டுகேட்டுக் களிப்படையுமாறு பாவ ரசங்கள் புலப்படச் செவ்விதி னெழுதப்பட்டிருக்கிறது.

இந் நாடகத்தையும், இவர்களால் இதற்குமுன்பு இயற்றப்பட்டு இருமுறை அச்சிடப்பெற்றுப் பிரசித்தியடைந்துள்ள பதிவிருதாபாரமயம் என்னும் நாடகத்தையும் பார்த்திருப்பவர்களுக்கும், "வார்த்தை பதினுயிரத்தொருவர்" என்பதனை மெய்ப்பித்து மிக அருமையுள்ளனவாக இவர்கள்செய்யும் பிரசங்கங்களை நேரிற்கேட்டிருப்பவர்களுக்கும், இவர்கள்பாடிய பதிகமுதலிய பிரபந்தங்களி னினியபாடல்களைப் படித்திருப்பவர்களுக்கும், இவர்களது கல்வித்திறமையையும், கற்பனுசக்தியையும்பற்றி விசேடித்துச் சொல்லவேண்டியதில்லை.

ஆங்கிலபாஷா பாண்டித்தியத்தால் இவர்கள் நியாயசபாபீடம் பெற்றிருக்கும் பிரஸித்தியுடன் வடமொழி தொன்மொழி யிரண்டிலும் கவனசக்தியோடுகூடிய இவர்களது உயர்ந்த பாண்டித்தியமானது தமிழ்ச் சங்கத்தின் சபாநாயக பதவிக்குத் தகுதியுடையதாகவிருக்கிறதென்பதைத் தெரியாதவர்களும் தெரிந்துகொள்ளும்படி

இந் நாடகப்பநுவலும், அதனிடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்ற பாத்திரக்கூற்ருகப் பாடிய மாதுரியமுள்ள பாடல்களும் சான்றுகூறு கின்றன.

அப்பாடல்களிலுள்ள பலவகை நயங்களையும் பண்டிதர்கள்தாமே கண்டுவக்கக்கூடுமாயினும், யான்கண்டவற்றுள் ஒன்ருயினுமெடுத் துரையாது சும்மாபுகழ்ந்துசொல்வது உசிதமாயிராதென்று துணிந்து சுருக்கமா யொன்றுமட்டும் ஸ்தாலீபுலாகநியாயங்கொண்டுகாட்டி யிதனை முடித்துவிடுகின்றேன்.

அஃதாவது கவி, தான் ஒருநாளும் அநுபவித் தறியாததொன் றை அநுபவித்தறிந்தோர் அதிசயித் துவக்குமாறு உள்ளபடி கூறு வது. இது மகாகவிப் பிரயோகங்களிலன்றி மற்ற சாமானியகவிப் பிரயோகங்களிற் காணுதலரிது. இதற்கு உதாரணம்:—"ஈன்றபொ ழுதிற்பெரிதுவக்குந்தன்மகனைச், சான்ருேனெனக்கேட்டதாய்" என் பதில், ஈன்றபொழுதில் தாய் உவக்கும் என்பது போல்வன.

இந் நாடகத்துள் முறைதிறம்பிய அரசன்மாட்டுப் பணிபுரிவோ னது நெஞ்சில் நிகழும் நிகழ்ச்சியை அப்பிரகாசமாக வெளியிடு மிடத்தில்,

"இச்சைப்படிநடக்கவேலாதபுன்பிழைப்பிற்
பிச்சைப்பிழைப்புப்பெரிதாகும்."

என்றதன் பாவம் அநுபவித்துணர்ந்தோரால் மிகவும் அதிசயிக்கத் தக்கதே. இவ்வாறே மற்றும் "கற்ருேனருமைகற்ருேனேயறியும் வந்திமகப், பெற்ருளருமையறியாள்" என்றபடி இந் நாடகச் செய்யு ளகத் தமைந்துள்ள அருமைப்பாடுகள் பலவுங்கண்டு அதிசயிக்கத்தக் கவர் புலவரே.

ஐயரவர்களுக்கு இயல்பாயமைந்துள்ள பல காரியங்களுக்கிடை யே இந் நாடகத்தை யியற்றித் தமிழுலகுக் குபகரித்த அவர்களது தமிழபிமானம் மிகவும் பாராட்டத்தக்கதே.

இன்னு மிவர்க ளித்தகைய நாடகங்களியற்றி வெளியிட்டுத் தமிழ்மக்களை மகிழ்விக்குமாறு அரோகதிடகாத்திரமுடையராய்ப் பல்லாண்டுவாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிக.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்,

சேந்தமிழ்.

நச்சினார்க்கினியர்.

(உஅக-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவரதுகாலம். இனி இவரது காலத்தை வரையறுத்துக்கூறல் முக்கியம். இதற்கு இவரது அருமையான உரைகளே மிக்க உதவியாகின்றன. அவற்றின் உதவியைக்கொண்டும் தற்கால சாஸன ஆராய்ச்சிகளின் உதவியைக்கொண்டும் இவ்விஷயத்தை ஒருவாறு தீர்மானிப்போம்.

1. சீவகசிந்தாமணி குணமாலையாரிலம்பகம் "வேந்தொடுமாதுகோடல்" என்ற 239-ம் செய்யுள் உரையில் "அன்றியும் தசகுமார சரித்திரத்துள் அன்னப்பார்ப்பை நூலிட்டுக்காலைக்கட்டின பாவத்தாற் பின்பு வெள்ளிவிலங்கு காலிற்கிடந்ததென்று ஆசிரியர் கூறியவாற்றானுமுணர்க" என்று நம்மாசிரியர் கூறியுள்ளார். தசகுமார ஆசிரியராகிய தண்டியின்காலம் 2-வது சிலாத்தியன் காலமாகிய 610 - 650 * ஆகையால் இவரது காலம் 7-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பது தெளிவாகின்றது.

2. சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் "நாடக நயந்து காண்பார்" என்ற 391-ம் செய்யுள் உரையிற் கோடகம் என்பதற்குப் பொருள் எழுதுங்காலத்தில்,

"முடியுறுப்பைந்தாந்தாமமுகுடமேபதுமத்தோடு
நெடியகோடகமேமற்றுநேர்ந்தகிம்புரியென்றாமே"

என்ற சூடாமணிநிகண்டின் பகுதியை எடுத்தாண்டிருப்பதாற் சூடாமணி நிகண்டுசெய்த மண்டலபுருஷன்காலத்துக்குப் பிற்பட்டவராவர் நம்மாசிரியர். மண்டலபுருஷன்காலம் கி. பி. 898 - 925 என்று தஞ்சை ஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரியார் அவர்கள் "தமிழகம்" என்ற

* Vide Page 18 of Romeshchandar Dutt's Ancient civilization.

பத்திரிகையிற் காலநிர்ணயஞ்செய்திருக்கின்றனர். ஆகையால் நம் மாசிரியர்காலம் 10-வது நூற்றாண்டுக்குப்பிற்பட்டிருத்தல்வேண்டும்.

3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் "உயிரும்புள்ளியுமிறுதி யாகி" என்ற 482-ம் சூத்திர உரையில் "அநபாயன்" என்ற உதா ரணம் காணப்படுவதால் நம்மாசிரியர் அநபாயனுக்குப் பிற்பட்டவ ராவர் என்பது திண்ணம். டாக்டர் ஹூல்ட்ஷ் ஆசிரியர் இவ் வநபாய சோழனே கோ இராஜகேசரிவர்மன், அல்லது குலோத்துங்க சோழதேவ ரென்றும் அவனது காலம் 11-ம் நூற்றாண்டின் பிற்பா கம் என்றும் கூறுகின்றனர். ஆகையால் நம்மாசிரியர் 12-ம் நூற் றாண்டிற்குப் பிற்பட்டவராவர்.

4. மகாமகோபாத்தியாயர் பிர்ம்மஸ்ரீ சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தில் அடியார்க்குநல்லாரைப்பற்றி எழுதுங்காலத்தில் "இவ்வுரையாசிரியர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்பது அவர் கூறிய சிலவிஷயங்களை நச்சினார்க்கினியர் மறுத்தெழுதுகின் றபடியால்" என்று கூறியிருப்பதாலும் அடியார்க்குநல்லார் 12-ம் நூற்றாண்டினர் என்பது ஸ்ரீ கோபிநாதராயர் அவர்கள் எம். ஏ. எழுதிய சிலாசாஸன ஆராய்ச்சியாற் றீர்மானிக்கப்பட்டிருப்பதா லும் நச்சினார்க்கினியர்காலம் 12-ம் நூற்றாண்டிற்குப்பிற்பட்டதென் பது தெளிவாகின்றது.

5. தொல்காப்பியம் எழுத்ததிகாரம "ங, ஞ, ண, ந, ம, ன" என்னும் 25-ம் சூத்திர உரையில் "கம்பன்" என்று ஓர் உதார ணம் காட்டப்பட்டிருக்கின்றது. ஆகையால் நம்மாசிரியர் கம்பருக் குப்பிற்பட்டவராவர். கம்பர் காலம் "எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்"என்ற செய்யுளால் இற்றைக்கு 1027 வருஷங்களுக்கு முன் என்பதாகும். "செந்தமிழ்"ப்பத்திரிகையில் எனது நண்பர் வித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் கம்பர் காலம் கி. பி. 1120 - 1200க்கு இடையிலிருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்ற னர். ஆகையால் நம்மாசிரியர் 12-வது நூற்றாண்டுக்குப்பிற்பட்டவ ராவர்.

6. தொல்காப்பியம் சொல்லதிகாரம் "ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்" என்ற 399 - ம் சூத்திர உரையில் "பைங்

கண், பைந்தார், பச்சிலை, காரா, சேதா என்றாற்போலும் பண்புத்தொகையாகியசொற்களைப் பசுமை, கருமை, செம்மை, எனப் பண்புப்பெயராகநிறுத்தி ஈற்றுயிர்மெய்யும், ஈற்றயலுயிருங்கெட்டு வருமொழிக்கேற்ப ஒற்றுத்திரிந்தும் திரியாமலும் ஆதிநின்ற அகரம் ஐகாரமாகவும் திரிந்தவென்றும், ஈற்றுயிர்மெய்யும் ஈற்றுயிருங் கெட்டு ஆதி நீண்டதென்றும், ஈற்றுயிர்மெய்யும் இடையில் ஒற்றுங் கெட்டு ஆதி நீண்டதென்றும் பின்னுள்ளோர் சந்திமுடிக்கின்றது பொருந்தாது. என்னை? பைங்கண் என்புழிப் பசியதாகியகண்ணெனப் பண்புணர்த்தும்ஈற்றைவிரித்தாலன்றிப் பசுமைக்கண்ணெனத் தாங்தொகுத்த பண்புப்பெயரை விரித்தலாகாமையின் இவை செய்யுட்குப் புலவர் சிறிதுநிற்பத்திரித்துக்கொண்ட பெயரெச்சவினைக் குறிப்புப்பெயரென்று உணர்க".

இஃது "ஈறுபோதல்" என்ற நன்னூற்சூத்திரத்தின் பொழிப்பாகக்காணப்படுகின்றது. ஆகையால் பின்னுள்ளார் என்று நம் மாசிரியர் கூறியது நன்னூலாரையே என்று புலப்படுகின்றது. இது நிற்க.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியலில் "இவ்விலக்கணத்தினது நுண்மையை உணர்தலாற்றாப் பின்னுள்ளோர் "முற்றேயெச்சமாகலுமுரித்தே" எனச் சூத்திரஞ்செய்தார். அவர் கருத்தைப்பற்றிச் சேனாவரையரும் முற்றெச்சமாமென்றார். அது பொருந்தாமை இக்கூறியவாற்றானுஞ் சான்றோர்செய்யுட்கு முன்னுள்ளோர்கூறிய உரைகளானும் காண்க." என்பதால் பின்னுள்ளோர் என்பது நன்னூலாரையே குறிக்கிறதென்பது நன்கு விளங்குகின்றது. நன்னூலார் 732 வருஷங்களுக்குமுன்னர் ஆண்ட சியகங்கன் என்ற அரசன் காலத்தைச்சார்ந்தவர். சியகங்கனைக்குறித்த சாஸனம் காஞ்சீபுரம் ஆலயத்தில் ஒரு விளக்கில் வெட்டப்பட்டிருக்கிறதாக ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் வெள்ளிடைமலைபோல் விளக்கியிருக்கின்றனர். (கி. பி. 1912 - 732) 1180-வது வருஷம். ஆகையால் நம்மாசிரியர் 12-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவராவர்.

7. சீவகசிந்தாமணி இலக்கணையாரிலம்பகம். "தருமணற்றருப் பையார்ந்த" என்ற 86-ம் செய்யுள் உரையில்,

"ஸம்ஹதாயவராய ஸஜ்வல்ருதெ ஸூரிநாதாய வயஙுஜல்ம வஙுவல்கும் । ஸூரவ்ருதெசவிவாஹ ஜஹீதமெ வாவகொவியிவந ஜயாவதூல்ஃ" ॥

என்ற கபர்த்தி காரிகை சுலோகத்தை நம்மாசிரியர் எடுத்தாண்டிருக்கின்ருர். தஞ்சை பிர்ம்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் தஞ்சைத் தமிழகத்தில் இக் கபர்த்தி என்பவர் ஸம்ஸ்கிருத காவ்யங்களுக்கும் மற்றும் அநேகம் பிரபந்தங்களுக்கும் வியாக்கியானம் எழுதிப் பிரசித்திபெற்ற ஸ்ரீ மல்லிநாதருடைய தந்தையாரென்றும், டாக்டர் பாந்தர்கர் முதலிய பாஷா நிபுணர்கள் கூறிப்போந்தவண்ணம் மல்லிநாதரது காலம் 13-ம் நூற்ருண்டின் பிற்பாகம் என்றும் விளக்கியிருக்கின்றனர். இதனுல் நம்மாசிரியரும் 13-ம் நூற்ருண்டின் பிற்பாகத்தவர் அல்லது 14-ம் நூற்ருண்டினர் என்பது தெளிவாகின்றது.

மேற்கூறிய பல காரணங்களால் நச்சினுர்க்கினியரது காலம் 13-வது அல்லது 14-வது நூற்ருண்டென்பது தெளிவாகின்றது.

இவரதுமதம். மெய்யெல்லாங்கோலஞ்செய்தாலும் நுதற்குத் திலகம் முதலியன இட்டாக்கால் அவை கோலமாகத்தோன்ருத்தன்மை போல இவரது மதத்தைச் சித்தாந்தப்படுத்தாவிடின் இவரது சரித்திரம் சிறப்புறமாட்டாது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழிமரபின் "ஓரெழுத்தொருமொழி" என்ற 45-ம் சூத்திர உரையில் திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி. பெரும்பற்றப்புலியூர் ஏழெழுத்தொருமொழி. என்று உதாரணங்கூறியிருத்தலாலும், சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம் 333-ம் செய்யுள் உரையில், "போகமீன்றதான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தையுண்டாக்கின புண்ணியன் என்ருர், திரிபுரத்தையழித்தும் நஞ்சுண்டும் பல்லுயிர்களையுங்காத்தலின். எய்தகணை - திருமால்" என்று கூறியிருத்தலாலும்,

சிவகசிந்தாமணி காந்தர்வதத்தையாரிலம்பகம் "பலிகொண்டு போத" என்ற 161-ம் செய்யுள் உரையில்,

"கடாமுங்குருதியுங்கால்வீழ்த்தபச்சைப்
படாமும்புலித்தோலுஞ்சாத்தும்பரமன்
இடாமுண்டநெற்றியானெஞ்ஞான்றுங்கங்கை
விடாமுண்டவார்சடையான்வெண்ணீறணிந்தோன்
மெய்யுறுநோயில்லைவேறோர்பிறப்பில்லை
யையுறுநெஞ்சில்லையாகாதவொன்றில்லை"

என்ற சிவசம்பந்தமான அருங்கவியை எடுத்துக்கூறியிருத்தலாலும்,

சீவகசிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் "வீடுமலியுலகினவர்" என்ற 106-ம் செய்யுளுரையில் "வீடுமலியுலகினவர்—சிவலோகம் பரமபதமென்கின்ற உலகிலுள்ள அரனும் அரியும்" என்று சிவலோகத்தையும், அரனையும் முதலிற்கூறியிருத்தலாலும்,

தமது உரைகளிற்பலவிடங்களிற் சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார் முதலியநூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருத்தலாலும்,

இவரது பெயராலும், இவரைத் தூயஞான நிறைந்த சிவச்சுடர்" என்று பெரியோர் கூறியிருப்பது சாலப்பொருத்தமேயாகும்.

அவ்வாறிருப்பினும், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்" என்ற 46-ம் சூத்திர உரையில் "கண்ணன் எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன்யானே" யெனக்கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க என்றதால் பகவற்கீதைமுதலிய வேதாந்த சாஸ்திரப்பயிற்சியுள்ளவரென்பதும், சிந்தாமணியில் "தருமணற்றருப்பையார்ந்தசமிதை" "நெற்பொறிநிறையப்பெய்து" "மந்திரவிதியின்மாண்டசிறுவிறற்றருப்பைசூழ்ந்து" என்ற செய்யுள்களுக்கு விரிவாயெழுதிய விசேடவுரையால் இவர் சிரௌதபரிசயமுடையவரென்பதும் விளங்குகின்றமையால் நம்மாசிரியர் ஸ்ரீமான் அப்பையதீக்ஷிதர்அவர்கள்போன்ற சிவநேசமுடைய ஸ்மார்த்தப் பிராமணர் என்பது வெளியாகின்றது.

(தொடரும்.)

எஸ். சாமிநாதையர்.

குவனி.

இற்றைக்கு 2,350-வருடங்களின்முன்னர் வங்காளதேசத்து மன்னவர்குலத்திற் பிறந்த விஜயராஜன் என்பான் இலங்காபுரியின் சீரிய வளப்பங்களேயெல்லாஞ் செவியாரக் கேள்வியுற்று அத் தேசத்தை எவ்வாற்ருனுயினுங் கைப்பற்றி ஆளவேண்டுமென்றெழுந்த பேரவா பிடர்பிடித்துந்தப் படைதிரட்டி மரக்கலமிவர்ந்து கடனெறிப் படர்ந்து இலங்கையின் தென்கிழ்ச் சாரலிலுள்ள கிரிந்தகங்கையென்னும் பேராற்றுவாயில் பரிவாரத்துடன் (கி. மு. 414-ஆண்டு) வந்திறங்கினனுகப் பழங்கதையுலாவும். இலங்கையின் வடமேற்றிசைக் கண்ணதாய புத்தளநகர்க் கணித்தாயுள்ள தம்மனேயென்னுமிடத்தில் கி. மு. 543-ம் ஆண்டளவில் வந்திறங்கினனென்று பண்டுலாவிய கதை பின்னவர் ஆராய்ச்சியிற் பிழையெனக்கண்டு தள்ளப்பட்டது.

விஜயராசன் வெகு புத்திசாதுரியமுடையவனுயிருந்தமையின், சுதேசிகளுக்குத் தக்கவாறினிமைகாட்டி நடந்து அவர்களுடன் கலந்துறவாடிப் படிப்படியே உள்நாடுகளிற் சென்றேறிச் சில நாளிலே அங்ஙனம் அதிகாரம்வகுத்துத் தலைமையெய்திவிளங்கிய பிரதானி ஒருவரின் அருமைக்குமாரி குவனி என்பாளே அக்கால முறைமைப்படி வதுவைசெய்து கொண்டனன்.

இப் பெண்ணரசி யாவராலும் வியந்து புகழத்தக்க பேரழகும் இனசனப்பெருக்கமும் செல்வாக்குமுடையளாயிருந்தனள். இவ் வியற்சிறப்புகளுடன் கணவன்பேரில் எல்லைகடந்துமிக்கவன்புங் குருட்டுப்பக்தியுங்கொண்டு அடிமைபோலும் வசப்பட்டொழுகியதால்,விஜயராசன் இவளேக்கைக்கிசைந்தவொரு கருவியாகக்கொண்டு, இலங்கை அரசுரிமையைக் கைப்பற்றவேண்டுமென்று நெடுநாட் கொண்டிருந்த தனதுகருத்தை மிகவும் எளிதில் முற்றுறப்பெற்றுக் கொண்டான். இப் பெருமாட்டி அதிக வலிமையோடும் பொருந்தி விளங்கிய தனது சுற்றமித்திரர்களேத் தன்கணவன் கற்றுக்கொடுத்த ஒரு பெருஞ்சூழ்ச்சிகொடுவஞ்சித்து அவன்கையிற் சிக்கிமடியக் காட்டிக்கொடுத்தனள். அது முதலாக இவளின் கீர்த்திப்பிரதாபங்

கள் யாவும் பின்னமுற்று அமரபக்கச் சந்திரனெத்துப் படிப்படியே குன்றத்தலைப்பட்டன. ஈற்றில் இவளுடைய பேருதவிகொண்டு நேர்ந்தவமரெல்லாங் கடந்து வெற்றிமாலைசூடிப் பெயர்நட்ட விஜய ராசனும் இலங்கை அரசுரிமையைச் செவ்விதிற்கைப்பற்றிக்கொண்ட வுடனே இவளையும் இவளின் அருமைப்பிள்ளைகளையும் புறக்கணித்துத் தள்ளிவிட்டான்.

கொண்டவனையே தஞ்சமெனநம்பி அவன்பொருட்டுத் தன் குலத்தையும் வேரறுத்த குவனி, தனது சுற்றத்தாருள் மாண்டவர் போக எஞ்சி நின்றாருள்ளும் பலராலே வெறுத்திகழப்பட்டமையால் மூழ்கியதுயர்க்கடலினின்றுங் கரையேறுவகையின்றிப் பெருங்கவல் கொண்டு மனங்கலுழ்ந்து வருத்தமுற்றிறந்தனள்.

கணவன் சொற்கமைந்தொழுகியதால் இவளோர் உத்தமபத்தினி யென்றும் குலத்துக்குவிளைத்த கொடும்பழி இவளையன்று இவளது கணவனையே சாரவேண்டியதென்றுஞ் சிலர் கூறுப. ஆயினும், கால தேசங்களுக்கேற்ப விகாரங்கொள்ளுந் தருமவியலை விரிக்குமறநூல்கள் கலியுகமாதர் தங்கணவராவார் ஏவுநெறி தீயவழியெனச் சங்கையின்றிக் காண்பாராயின் அந்நெறிக்கட் சேருதொழிதலே அவர்க்கியைந்த முறையாமென்று தெள்ளிதின் வலியுறுத்தும்.

அன்புமிக்குடையளாய்த் தன்னையே தஞ்சமென்று நம்பியொழுகிய மனையவளை இவ்வண்ணங் கனங்குறைத்துக் கைவிட்ட விஜயராசன், மறுகிவருந்தி வியாகுலமுற்றுக் குலையவேண்டிய தனது சித்தத்தை எங்ஙனம் எவ்வாறு சமாதானப்படுத்திக்கொண்டனனோ தெரியவாராது. இவனது அரசு முன்பின் முப்பத்தைந்து வருடகாலமளவும் ஒருவாறு நிலவிச்சென்றதாகவும் அப்பால் இவனுடைய மருகன் பாண்டுவரசன் என்பான் அரசுக்கு வந்ததாகவும் சரிதங்கள் சாற்றும்.

இலங்கையில் நிகழ்ந்த பூர்வீகசம்பவங்களில் முதன்மைபெற்றுலவுவது இராம ராவணயுத்தம். அதற்குப்பிந்திய பழஞ்சரிதைகளிற் காலத்தாற் றலைமையுறக்காண்பது மேற்குறித்த விஜயராசன் வரலாறேயாம். இச் சரிதம் சிலகாலத்தின்முன்னர்த்திரட்டப்பட்

டுக் குவனிமாலையென்னும் பெயருடன் ஒரு பிரபந்தமாயிற்று. இன்னும் அச்சிவர்ந்து வெளிவரவில்லை. அம் மாதிரிகையி னொருசிறிது வருமாறு:—

[குவனிவருந்தல், செவிலிதேற்றல்.]

என்செய் கோயா னென்செய் கோயான்
அன்புடைச் செவிலி யென்செய் கோயான்
காதல னென்னைக் கைவிடற் குற்ற
வேதறி கில்லேன் யாது செய்குவல்
தந்தை தாய்குரு தமரொடு தெய்வம்
வந்த நாயக மன்னவ னென்று
சிந்தையி னினைந்து தினமவற் போற்றி
வந்தனை யோடு வழிபா டாற்றி
வேண்டுவ வேண்டுவ விருப்புற நல்கித்
தூண்டிய பொல்லாச் சூழ்ச்சிகள் முடித்தும்
பாதகி யென்று பந்தின மிகழத்
தோதகஞ் செய்து துணைபல திரட்டி
மாற்றலர்ச் செகுத்து மணிமுடி புனைவித்
தேற்றி யரியணை யினிதுற வைத்தேன்
இப்பரி செல்லா மியற்றிய வென்னை
அப்புற மகற்றல் கைம்மா றுங்கொல்
என்பா லார்வ மின்றென் றொழியினுந்
தன்பா லகரைத் தணத்தலுந் தகுமோ
அருஞ்சமர் கடந்த வதிபருஞ் சேனையும்
பெருங்களிற் றணியொடு பெயரா நிலைஇக்
காவல் செய்யுங் கடிநகர் நடுவண்
தேவரு முனிவருஞ் சிறந்ததென் றேத்தப்
பொன்னெடுங் கிரியிற் புரைதவ வுயரிய
பன்னெடுங் கதவப் பவனமே லறையில்
விரிமலர் ஞெமிரிய மெல்லணைச் சேக்கையிற்
சுரிகுழற் சிலதியர் சூழ்ந்து புறந்தரக்
கண்டுயில் கொள்ளுங் காதற் சிறுவர்

மண்டிய பசியால் வருந்தியு நொந்தும்.
இச்சிறு குடிசையி லேதிலர் போல
அச்சமுற் றயரு மாற்றுப் பருவரல்
காண்டொறுங் காண்டொறுங் கனன்மெழு கெனத்துயர்
ஈண்டிய நெஞ்ச மிடைந்துடைந் துருகலின்
என்செய் கோயான் என்செய் ....

*　　*　　*　　*

*　　*　　*　　*

தஞ்சமற் றுருகித் தடங்கணீர் சொரிய
நெஞ்சகங் குழையு நேரிழை.கேண்மோ
இந்திர சாலக் கந்துக மெனவே
அந்தரத் தியங்கு மிந்தமா நிலத்திற்
பிறப்பிறப் பின்ப துன்பமும் பிறவும்
முறைப்படி நிகழ்வன முடிவன வன்றி
நித்திய மாகி நிலைப்பதொன் றில்லை
சத்திய மிதற்குச் சாட்சியே காட்சி
ஒவ்வொரு பவத்தி லுஞற்றிய வினைப்பலன்
அவ்வப் பவத்தி னனுபவத் தடங்கா
நின்ற சேடம் நேர்வரு பவத்தில்
ஒன்றும் பிறழா தூழ்முறை யிதுவே
ஆதலி னன்றுந் தீதொடு வாழ்வுஞ்
சாதலு நோதலுந் தணிதலும் பிறவும்
விதிவழித் தன்றிப் பிறர்தர வாரா
மதிமுக மடந்தாய் மனக்கவ லொழிவாய்
பகலிர வென்னும் படிமுறை மாறிச்
சுகமொடு துயரஞ் சூழ்தலு மியல்பே
இருவினை செய்குநர் இருவினை முற்றித்
தருபல னனைத்துந் தாமே நுகர்வர்
கேள்வ னிகந்ததுங் கிளைஞர் வெறுத்தது
மூழ்துரந் தன்றோ வொருவரை நோகேல்
வந்தன மேலும் வருவன வெல்லாம்
எந்தவப் பயனென் றேற்றமைந் தொழுகாய்

மக்கடம் வினையும் மக்களைச் சார்தலின்
அக்கவல் கொண்டு மழுதகங் குழையேல்
திடம்பெறு நெஞ்ச மிடும்பைகண் டஞ்சி
நடுங்கலு மழகோ நாரியர்க் கரசே.!

* * * *

ச. பூபாலபிள்ளை.

உ

வெள்ளியந்திருமலைகிழார்

இவர் இம் "மதுரைத் தமிழ்ச்சங்க"ப்புலவருள் ஒருவர். செந்தமிழ்ப் பரிபாலகரும், தலைமைப் புலவருமாகிய ஸ்ரீமான்-பாண்டித்துரைத்தேவனூர் செந்தமிழ்ச் சங்கம் நான்காவதொன்று இரீஇயினூர் என்பது சமாசாரம் தஞ்செவி மடுக்கப்பெற்ற ஞான்று, ஆராமைமிகுதியாற் "போற்றுகம் வம்மே போற்றுகம் வம்மே" என்று புலவர்களை உளப்படுத்தி ஆற்றுப்படுத்திய திருநல்லூர் வெள்ளியந்திருமலைகிழார் என்பார் இவரேயாவர். இவர் இயற்பெயர் திருச்சிற்றம்பலகைலாசபிள்ளை என்பது. இவர்க்கு இந்தமீ' நடாத்தப்பட்ட எங்கள் மகிமாவது ஜோர்ச் மன்னரது ஜெனனதினக் கொண்டாட்டத்தில், இலங்கைத் தேசாதிபதியவர்களால், சிறப்புப்பெயர் ஒன்று அளிக்கப்பட்டது. அதுதான், இராசவாசல் முதலியார் (Mudaliyar of the Governor's gate) என்பது. இஃது இந்திய மன்னரால் அளிக்கப்படும் "ராயவ்பகதூர்" என்னும் சிறப்புப்பெயருக்குச் சமமானது. இச் சிறப்புப்பெயர் அளிக்கப்பட்டமைக்குக் காரணங்களும், தேசாதிபதியவர்களால் அமைச்சரும், பிரதானிகளும், பிரபுக்களும் ஒருங்குகுழீஇயிருந்த போத்தாணிக்கண்ணே எடுத்துக்கூறப்பட்டன. அவைதாம், "இருபத்தேழரைவருடம் திறமையும் நேர்மையுமுடையராய் உத்தியோகம் பார்த்தமையும், உயர்குடிப்பிறப்பும், நல்லொழுக்கமும், தமிழ்ப்புலமையும்" என்பன.

இவர்க்குப் பிரபுத்துவமும் தமிழ்ப்புலமையும் பரம்பரையாக அமைந்துள்ளன. இவர் நல்லூர் வித்துவரோமணி மனப்புலிமுதலியார் சரவணமுத்து முதலியாருக்குத் தௌகித்திரர். சரவணமுத்து முதலியார், இருபாலையிலிருந்த மஹாவித்துவான் சேனாதிராய முதலியாருடைய மாணவர்களுள்ளே சிரேட்டர்; சைவசிகாமணியாகிய ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுக்குத் தமிழ் கற்பித்த நல்லாசிரியர்.

வெள்ளியந்திருமலைகிழார், பலவருடங்களுக்குமுன்னே இந்தியாவில் வசித்தபொழுது தாம்பாடிய வடதிருமுல்லைவாயில் மும்மணிக்கோவை என்னுஞ் சிறுகாப்பியத்திலுள்ள சில பாக்களை, அக்காலத்தில் திருவாவடுதுறை மடத்துப் பண்டாரசந்நிதிகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ல ஸ்ரீ-சுப்பிரமணியதேசிக மூர்த்திகளது சந்நிதானத்திற் படித்துக் காட்டியுள்ளார். அப்பாக்களுள்ளே "அருண்மதிபோற்றி அருண்மதிபோற்றி" என்னும் ஆசிரியப்பாவைப் படித்தபொழுது,

"அதாஅன்று, ஒரோவொன் றுணர்வே விராவு தாவரக்கும்
ஐயநின் னருள் அளித்தனை யன்றே
கொற்றங் குடியி லரும்பெற லூற்ற
சிறுமுட் புதலிதற் குறுசான் றுமே."

என்னும் அடிகளைக்கேட்டவிடத்துத் தேசிகமூர்த்திகள் மிகமகிழ்ந்து, அவ் வாசிரியப்பாவைப் பின்னுமொருமுறை படிக்குமாறு கட்டளையிட்டருளி அதனை மிக வியந்துகொண்டருளினார்கள். பண்டித சிகாமணி மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ-சாமிநாதையரவர்கள் இதற்குச் சான்றுபகருவார்கள்.

அம் மும்மணிக்கோவையிலுள்ள ஆசிரியப்பாக்களெல்லாம் கல்லாடம் முதலிய சங்கநூற் செய்யுட்கள்போல்வன. சில தோத்திரரூபமாக அமைந்துள்ளன. சில அகப்பொருட்டுறைகள் அமைந்துள்ளன. அவற்றுள்ளே குறிப்பறிதல் என்னும் அகப்பொருட்டுறை அமைந்த ஆசிரியப்பாவை இங்கே எடுத்துக் காட்டுதும்.

நேரிசையாசிரியப்பா

"தேசிவர் தடித்துத் தெளித்தசெஞ் சடைமிசை
மாசுதவிர் சிறுமதி மறன்மறந் துடங்கு

மாசுணம் பயிலிய வைத்தவெம் மாசிலா
மணியென வண்பெய ரணியிய நாயகன்
கொடியிடை யம்மையொடு கோயில்கொண் டருளிய
முல்லை வாயி லன்ன மெல்லியால்
பாய்திரை நடுவட் பராரை மாவாய்த்
தீவாய் நஞ்சம் பிலிற்று மெயிற்றுப்
பாந்தட் பரமாம் பாரகப் பரப்புங்
காந்து சீற்றத்துக் கடுமுரட் களிற்றின்
எருத்தங் தவிர்ந்த வுருத்தழை கண்ணன்
விண்வத் துயரிய வெண்ணுடை வைப்பும்
அரியய னமர்தற் குரியபேர் வரைப்பும்
அண்ட கூடமும் பிதிர்பட வுலைத்த
மண்டுபே ராற்றற் சூரெனு மவுணன்
வச்சிர யாக்கையா முக்கிரப் பொருப்பினை
உருமிற் சீறா உ விருகூறு படுத்த
வள்ளிலை வெள்வேல் வலன்றிரி யியவுள்
வள்ளியெங் குமரியை மெல்லக் கள்ளிய
குமரற் றகைய கோலத்தொர் குரிசில்
கொடுவரி வெளில்வாற் குரற்புனத் தேளத்து
வருகுவர் வாளாங் கொருமொழி வழங்கலர்
திரிகுவ ரானின் றிறந்தேர் பாற்றரோ
மாது நீ மொழிமோ வாழிய
யாதுகொ றில்ல யாஞ்செய வற்றே.”

வெள்ளியந்திருமலைகிழார், இவ்வாறு கல்வி, அதிகாரம், குடிப்பிறப்பு முதலியவற்றாற் சிறந்துள்ளாராயினும், சிறிதும் பெருமிதமின்றி எவர்மாட்டுந் தண்ணளியுடையராய் அடங்கியொழுகும் இயல்புடையர். “தூக்கின்—மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல,

வலிதன்றே தாழுங் துலைக்கு" என்பது ஆன்றோர்வாக்கு. இச் சங்கப் புலவருள் ஒருவராதலின், இவர் அரசினரால் சிறப்புப்பெயர் புனையப் பெற்றமை காரணமாக எழுதப்பட்ட இவ்விஷயமும் "செந்தமிழு"க்கு உரியதென்றே கொள்ளுதும்.

இங்ஙனம்,

ச. கந்தையபிள்ளை,
Tamil Pandit,
Government. Training College,
Colombo.

உ

சூரிய சித்தாந்தம்.

பலவித காலங்களைப்பற்றிய அத்தியாயம்.

காலநிர்ணயம் இத்தனைவிதமென்பது.

(1) பிராம்ம, திவ்ய, பித்ரிய, பிராஜாபத்திய, பார்ஹஸ்பத்திய, சௌர, நக்ஷத்திர, சாந்திர, சாவனமானங்களென ஒன்பது பகுதித்தாம்.

இந்தப்பாகங்களிலுபயோகப்படுவதிஃதென்பது.

(2) சௌரம், சாந்திரம், சாவனம், நக்ஷத்திரமானம் என்னும் நான்கும் இந்தக்கோளத்திலுபயோகப்படுகின்றன; பார்ஹஸ்பத்தியம் வருடங்களறியமாத்திரம் உபயோகப் படுகின்றது; மற்றவை இங்கு அநுஷ்டானத்திலில்லை.

சௌரமானம் உபயோகிக்கப்படும் காலம்.

(3) அகசுப்பிரமாணம், ஷடசீதிமுகம், மேஷதுலாயனங்கள், மகர கடகாயனங்கள், மாதசங்கிரமணம் முதலியவை அறிய உபயோகப்படுகின்றது.

ஷடசீதிமுகம்.

(4) துலாதியினின்று வரும் எண்பத்தாறுவது சௌரமானநாள் ஷடசீதிமுகமாம். இந்த நான்கு தினங்களும் சூரியன் மிதுநம், கன்னி, தனுசு, மீனங்களான மாதங்களிற் செல்லுங்காலுண்டாகின்றன.

ஆண்டிலுள்ள நான்கு ஷடசீதி முகங்கள்.

(5) தனுசிற் சூரியன் 26-வது பாகையிற் செல்லும்பொழுது முதலாவது ஷடசீதிமுகமும் மீனம் 22-வது பாகையிலும், மிதுனம் 18-வது பாகையிலும், கன்னி 14-வது பாகையிலும் செல்லும்பொழுது மற்றவைகளு முண்டாகின்றன.

(6) கன்னியில் ஷடசீதிமுகம் உண்டானபிறகு எஞ்சியிருக்கும் 16-நாட்களும் சிறந்த புண்ணிய தினங்களாகும். இக் காலங்களி லிறுக்கப்பட்ட தென்புலத்தார் கடன் அதிக சிலாக்கியமானது.*

நாடி வலயத்தில் நான்கு பொதுவிடங்கள்.

(7) ஆகாயவலயத்தின் மத்தியிற் சைத்திர துலாவிஷுக்கள் எதிரிடையாக விருக்கின்றன. இதுபோலவே அயனங்களிரண்டு மிருக்கின்றன. இந்நான்கும் சாதாரணமானவை.

மற்றப்பாகங்கள்.

(8) நாடிவலயத்தில் ஒவ்வொருவிட்டத்திற்கும் மத்தியில் இரண்டு மாதசங்கிரமணங்கள் உண்டாகின்றன. அவைகட்கு விஷ்ணுபதியென்றுபெயர்.

அயனவாண்டினிருபாகங்கள்.

(9) மகரத்திற் சூரியன் பிரவேசிக்குங்கால முதல் ஆறுமாதங்கள் உத்தராயணமெனப்படும். கடகத்திற் சூரியன் பிரவேசிக்குங் காலமுதல் ஆறுமாதங்கள் தக்ஷிணாயனமெனப்படும்.

ருதுக்கள், மாதங்கள், ஆண்டு.

(10) துலாதிமுதற்கொண்டு இரண்டிரண்டிராசிகளிற் சூரியனிற்கு மிரண்டிரண்டு மாதங்கட்குச் சிசிரம் முதலிய ருதுக்களும், மேஷமுதல் 12-இராசிகளி லருக்கனிற்கச் சித்திரை முதலிய மாதங்களும் முறையே வருவனவாம். இவற்றின் மண்டலங்களே ஆண்டுகளாகும்.

* இக்காலந்தான் மஹாளயபக்ஷமாம்.

சங்கிரமண விசேஷகாலம். (11) மாதசங்கிரமணகாலத்தை[1]60ற்பெருக்கி நித்தியகதிக்கீயக் கடிகைக ளேற்படும். இக்கடிகையின் முற்பாகம் முடிகின்றமாதத்தின் கடைசியிலும், பிற்பாகம் வருகின்ற மாதத்தின் முதலிலும் நிற்க மாதப்பிறப்பென்னும் விசேடகாலமாகும்.

சாந்திரமானம். (12) சூரியனுடனிருந்து சந்திரன் கிழக்கே செல்லுகிறுன். அவ்விதம் 12 பாகை சென்றபோது ஒரு சாந்திரமான நாளாகும்.

சாந்திரமானம் உபயோகப்படும் காலம். (13) திதி, கரணம், திருமணம், சௌளமுதலிய சுபகருமங்கள், யாகயக்ஞமுதலிய ஹோமகாரியங்களெல்லாம் சாந்திரமானத்தை அநுசரித்தவை.

பித்ருமானம். (14) முற்கூறியபடி கூடிய 30-சாந்திரமான தினங்கள் பிதிரர்கட்கு ஒரு இரவும் பகலுமுள்ள ஒரு தினமாம். சாந்திரமானமாதமுடிவும், சுக்லபக்ஷமும் பிதிரர்களின் நண்பகலிலேற்படுகின்றன.

---

(1) மாதசங்கிரமணம் பலமாதிரியாகக்கொள்ளப்படுகிறது. திருக்கணித பஞ்சாங்கக்காரர்கள் சாவனமானத்தைக்கொண்டு நாளொன்றுக்கு 59 - நாழிகை 50 விஞடியாகக்கணிப்பர். வாக்கியபஞ்சாங்கிகள் எங்கும் வழங்கும் மேஷம் $4\frac{1}{4}$, ரிஷபம், $4\frac{3}{4}$, என்னும் கணக்கை அனுசரிப்பர். காலஞ்சென்ற ஸ்ரீமத்-சிதம்பரையர் தமது பிரகத்ஜாதக மொழிபெயர்ப்பில் 12-வது அக்ஷாம்சபாகைக்கு மேஷமுதல் முறையே 4-31, 5-5, 5-29, 5-23, 5-7, 5-2, 5-15, 5-29, 5-21, 4-42, 4-21, 4-14, என்றெழுதுவர். மிஸ்டர் L. D. சுவாமிக் கண்ணுப்பிள்ளை 12-வது பாகைக்கு மேஷ மீனங்களுக்கு 6060 செகண்டுகள், ரிஷப கும்பம் 6690, மிதுனமகரம் 7530, கடகதனுசு 7950, சிம்ம விருச்சிகம் 7680, கன்னி துலாம் 7290, என்று இந்தியன் கிரணலஜியிற்குறிப்பர். திருக்கணித பஞ்சாங்கக்காரர்கள் கொடுக்கும் 59 நாழிகை 50 விஞடியும் மற்றைய 60 நாழிகையும் மொத்தத்திற்சரியானதுதான். திருக்கணிதர் சாவனரீதியாக 59-50 ஒருநாளாகக்கொண்டனர். அது பின்னர் வியவகரிக்கப்படும். ஆங்கிலத்தில் Civil Time என்று சொல்லப்படும்.

நக்ஷத்திரமானம். (15) நக்ஷத்திரமண்டலம் பிரமணம் செய்வது நக்ஷத்திரமானமாம். *

சாந்திரமான மாதப்பெயர்கள். (16) சாந்திரமான மாதப்பெயர்களெல்லாம் சாந்திரமான தினத்தின் மத்தியில் 15-வது தினத்தில் நக்ஷத்திர நிற்பதைக்கொண்டு கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஆச்வயுஜம், பாத்திரபதம், பால்குனம் இவைகளில் மும்மூன்று நக்ஷத்திரங்களும், மற்றமாதங்களில் இவ்விரண்டு நக்ஷத்திரங்களும் சங்கிரமிக்கின்றன.

பார்ஹஸ்பத்திய மானம். (17) † ... ...

சாவனமானம். (18) சூரியன் ஒரு உதயத்திலிருந்து மற்றொரு உதயம் வரையிற் கூடுங்காலத்திற்குச் சாவனம் அல்லது பூமானமென்னப்படும். (2)இதனாற்றான் கற்பம் நிர்ணயிக்கப்படுவதுடன் யக்ஞ காலநிர்ணயமும் செய்யப்படுகிறது.

---

* குறிப்பிட்ட நக்ஷத்திரம் ஒருதரம் சுற்றிவந்து மறுபடி காண 60 நாழிகையாகும். இதற்கும் சாவனத்திற்கும் நான்குநிமிஷ வித்தியாசங்களுண்டு. ஆங்கிலத்தில் இதற்கு Siderial என்று பெயர்.

† விளங்கவில்லை.

(2) ஒரு உதயத்திலிருந்து மற்றொரு உதயம் வரையில் வருவதாவது:— சூரியனை நாம் இன்று பார்த்தவிடத்திலேயே நாளைப் பார்க்கமாட்டோம். சூரியன் தன்னைச்சுற்றிப் பிரமணம் செய்கிறதென்றும், பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதன்றிச் சூரியனையும் சுற்றி ஒடுகிறதென்றும் சொல்லியிருக்கின்றோம். அங்ஙனமாகத் தன்னைத்தான் சுற்றுவதோடு சூரியனையும் சுற்றுமானால் இடப்பெயர்ச்சியுண்டாகிறது. இந்த இடப்பெயர்ச்சியால் தினமானம் சூரியஉதய முதல் மறு உதயத்திற்கு வித்தியாசமேற்படுகிறது. இந்த வித்தியாசம் நாளடைவில் அதிகமேற்படும். மேனாட்டார் இந்த வித்தியாசம் தினமொன்றுக்கு நான்கு நிமிஷமென்றும், ஒருவருஷத்திற்கு ஒருநாளாகிறதென்றும் கணக்கிடுகின்றனர்.

இதன்பலன். (19) சூதகநிர்ணயம், தின, மாத, ஸம்வத்ஸ ராதிபதிகள், கிரகாதிகளின்காலங்கள் இவை நிர்ணயிக்கப்படுகின்றன.

தேவமானம். (20) முன்னரே சுராசுரர்கட்கு இரவு பகல் மாறிவருமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. (3) ஆதித்தப்பிரமணத்தா லுண்டாகும் காலத்திற் குத் திவியமான மெனப்படும்.

பிராஜாபத்திய மானம். (21) 71 யுகங்கள்கூடிய ஒரு மநுவந்தரம் பிராஜாபத்தியமானமாம். இதனிற் பகலிரவு பிரித்தல் சாத்தியமன்று.

பிராம்மமானம். (22) ஒரு கற்பந்தான் பிராம்மமானம்.

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீமாந்-T. இராமகிருஷ்ணபிள்ளையவர்களுக்கு

ராவ் ஸாஹிப் பட்டம்

தன்னுயிர்போல மன்னுயிர் புரக்கும் நமது அரும்பெறல் அரச ராகிய ஐந்தாம் ஜியார்ஜ் அவர்களுடைய பிறந்த நாளைச் சிறப்பிப்ப தற்காகச் சிலநாட்குமுன் பல சான்றோர்க்குக் கௌரவப்பட்டங்கள் அளிக்கப்பட்டன என்பது பலர்க்குந் தெரிந்த விஷயம். அவற்றுள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீமான்-தோட்டக்காடு இராமகிருஷ்ணபிள்ளை B.A., F.M.V., F.R.H.S. அவர் களுக்கு 'ராவ் ஸாஹிப்' பட்டம் கிடைத்தமைபற்றித் தமிழ்நாட்டார் அனைவரும் மிக்கமகிழ்ச்சியெய்துவர் என்பது திண்ணம்.

---

(3) "செந்தமிழ்" தொகுதி—௧௦. பகுதி—௪.

நம் பிள்ளையவர்கள் சிறுபிள்ளையாய்க் காலேஜில் ஆங்கிலங்கற்று வரும்போதே, கலாசாலைத்தலைவரும், ஆங்கில போதகாசிரியருமாகிய டாக்டர் மில்லர் துரையவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றனர். பிள்ளைப்பருவந்தொட்டே இவர்க்கு ஆங்கிலம், தமிழ் இவ்விரு மொழியிலுமுள்ள காவியநூல்களைக் கற்றுணர்வதில் விருப்பம் அதிகம்.

கலாசாலைப் படிப்புமுடிந்து, உத்தியோகத்தில் அமர்ந்திருந்த போதும், தமது ஒய்வுநேரத்திலெல்லாம் நம் பிள்ளையவர்கள் நூலாராய்ச்சி செய்துவருவார். இக்காலத்து உயர்தர உத்தியோகத்திலுள்ளாரிற் பெரும்பாலார், தம் ஆபீசுத்தொழில் சம்பந்தப்பட்டதுண்டுக்காகிதங்களைச் சேர்த்துக்கட்டுதற்குவேண்டிய நூலினது நயமுணர்வரேயன்றிச் சான்றோரியற்றியுள்ள சொற்பொருணயங்கள் மிக்க அற்புதநூலின் நயமுணர்தலை அறவே மறந்துவிடுகிறார்கள். இன்னும், இத்தகையார், தாம் மனைவிமக்களுடன் இனிது வதிதற்குப் புத்தகம் (புதியவீடு) விரும்புகிறார்களேயன்றித் தமது மனக்கோட்டம் நீங்கியொழிதற்குத் துணைக்கருவியாகிய புத்தகம் விரும்புவதில்லை. இவ்வநுஷ்டான விதிக்கு விலக்காக, பிள்ளையவர்கள் தம் தமிழ்நூலாராய்ச்சியின் பயனாகத், தமிழர்களது நாகரீகம், நடை,யுடை, பாவனை முதலியவற்றை விளக்கி, ஆங்கிலமொழியில் தேனினுமினிய செய்யுணடையிலும், வசன நடையிலும் கதைரூபமாகச் சில நூல்கள் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இவர்கள் இயற்றியுள்ள இந் நூல்களின் சிறப்பு இத்தன்மையதென்பது மேற்குறித்த டாக்டர் மில்லர் துரையவர்களும், முன்னர்ச் சென்னைக்கவர்னராயிருந்த ஸர் கிராண்டப் துரையவர்களும், விக்டோரியா மஹாராணியார்க்குச் சம்ஸ்தான வித்வானாயமர்ந்திருந்த ஆங்கிலக் கவிவாணர்களுள் ஒப்புயர்வில்லா மெய்ப்புலவனாகிய ஆல்ப்ரட் டெனிஸன்துரையவர்களும், பிறரும், பல சிறந்த ஆங்கிலப்பத்திரிகைகளும் கூறியிருக்கும் நல்லபிப்பிராயத்தினால் அறியக்கிடக்கின்றது. இவரது ஆங்கிலநடை, இனிமையும் ஆற்றலும் இனிதுசேரப்பெற்றுக் கற்போர் மனத்தினைக் கவர்ந்து செல்லும் சிறப்பினையுடையது. சில ஆண்டுகட்கு முன் சீமையெனப்படும் இங்கிலாந்தில், ராமேச சந்திர தத்தர் பேரும், நம் பிள்ளையவர்கள்பேருமே இவ் விருவரும் இயற்றி

யுள்ள ஆங்கிலநூலின் நடைச்சிறப்புப்பற்றி, ஆங்கிலர்களுட் பலர்க்குத் தெரிந்திருந்தனவாம்.

பிள்ளையவர்கள் இயற்றியுள்ள நூல்கள் ஆங்கிலமொழியில் அமைந்துளவெனினும், அவற்றுள் பக்கந்தோறும் தமிழ்மணமே கமழாநிற்கும். இங்ஙனம், தமிழின்சுவையை, ஆங்கிலத்திற் கதைநூலால் விளக்கியது, மருந்தினைவிரும்பாக் குழவிகட்குத் தாய் அம்மருந்தினைச் சருக்கரையுள் மறைத்துதவுவதுபோலத் தாய்மொழியாகிய தமிழ்மொழியினை விரும்பாத, ஆங்கிலங்கற்ற நம்மவர்க்கு அறிவுறுத்தற்குட்போலும். இங்ஙனம் நம்நாட்டாரும், பிறநாட்டாரும் தமிழின் சுவையுணருமாறு செய்த இவர்களின் தேசாபிமானமும் பாஷாபிமானமும் மிகப் பாராட்டற்பாலன.

இப்படிப் பிள்ளையவர்கள் நம்நாட்டுப் பண்டைச்சரித்திரம், நாகரீகம் முதலியவற்றை விரித்து, ஆங்கில நூலிற் புனைந்தமைபற்றிச் சீமையிலுள்ள ராயல் ஹிஸ்டாரிகல் ஸொஸைட்டியார் பிள்ளையவர்களைத் தம் சங்கத்தின் அங்கத்தினராக்கிக்கொண்டனர். அதற்கறிகுறியாகவே இவர்களுக்கு F. R. S. H. பட்டம் ஏற்பட்டது. இச்சங்கத்திற் சேர்ந்திருப்பது கற்றோரால் விசேஷகௌரவமாகக் கருதப்படுகிறது. இரண்டு வருஷங்களுக்குமுன் இவர்கள் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள பல நூலாசிரியர்களும், பத்திராதிபர்களும் தாமே வலியவந்து பிள்ளையவர்களுடன் நட்புப்பாராட்டினார்களென்றால், அவர்களுடைய நூலின் சிறப்பைக்குறித்து இனிக்கூறுவது மிகையேயாகும்.

நம்பிள்ளையவர்கள், சென்னையூனிவெர்ஸிடி சகாக்களில் (Fellows) ஒருவர். இவர்கள் பல வருஷங்களாக, எப்.ஏ., பி.ஏ., எம்.ஏ. முதலிய உயர்தரப் பரீக்ஷைகளுக்குப் பாடபுத்தகங்கள் நியமிக்கும் சங்கத்தில் ஒருவராக இருந்திருக்கிறார்கள். மேற்குறித்த பட்டப் பரீக்ஷைகளுக்குப் பிரதம பரீக்ஷகராகவும், பரீக்ஷகர் சங்கத்தின் தலைவராகவும் இவர்கள் நெடுங்காலம் இருந்திருக்கிறார்கள்.

இத்தகைப் பெருமைவாய்ந்த நம் பிள்ளையவர்கட்குக் கவண்மெண்டார் "ராவ்ஸாஹிப்" பட்டம்தந்து கௌரவித்தது மிகவும் ஏற்புடைத்து. இச் செய்கையைக் குறித்துச் சென்னை "ஹிந்து" பத்தி

ரிகை, இராமகிருஷ்ணபிள்ளையவர்களைச் சிறப்பித்தது, காவியநூல்களைச் சிறப்பித்ததுபோலாம் என்று பாராட்டியிருக்கிறது.

நம் தமிழ்நாட்டில் இக்காலத்தில் நாமகள் தொண்டுபூண்டொழுகி, அதனாற் கோமகன் நன்மதிப்பையும், அதற்கறிகுறியாக அளிக்கப்பட்ட கௌரவப்பட்டத்தையும் பெற்றவர்கள் இருவரேயாகும். அவருள் முதல்வர் பிர்ம்மஸ்ரீ- மஹாமஹோபாத்தியாயர்: வே. சாமிநாதையரவர்கள். இரண்டாமவர் நம் பிள்ளையவர்களே.

பிள்ளையவர்கள் சில மாதங்கட்குமுன் சென்னை ஹைக்கோர்ட்டில் தாம் வகித்திருந்த உயர்தர உத்தியோகத்தினின்றும் நீங்கி உபகாரச்சம்பளம் பெற்றுக்கொண்டனர் என்றும், இனித் தம் முழுநேரத்தினையும் நூல்களெழுதுவதிலேயே போக்கக்கருதியிருக்கிறார் என்றும் கேட்டு மகிழ்கின்றோம். இந் நன்முயற்சி இவர்கட்கு இனிது கைகூடுக என்றும், இவர்கட்கு அரிதிற்கிடைத்த பட்டத்தோடு இவர்கள் பல்லாண்டு நல்வாழ்வுபெறுக என்றும் பெருங்கருணைத் தடங்கலாகிய இறைவன் திருவடியை இறைஞ்சுவேமாக.

இவர்கள்மீது இச் சந்தர்ப்பத்தில் யாம்பாடிய இரண்டு செய்யுட்கள் பின்வருமாறு:—

வெண்பா

பேரா ரிராமகிருஷ்ண பிள்ளை யெனும்பெரியோய்
ஏரார் "ராவ் சாஹிப்" எனும்பட்டம்—சீரார்நம்
ஆங்கில வேந்தருனக் காய்ந்தளித்தல் கேட்டுவகை
ஓங்கித் ததும்பும் உளம்.

அறுசீர்விருத்தம்

வாழிய இராம கிருஷ்ண வள்ளலே! சுற்றத் தோடும்
வாழிய நீவ குத்த மாசிலா நூல்கள் யாண்டும்
வாழிய வுனக்கந் நூலால் வந்துறு புகழும் நாளும்
வாழியிவ் வணங்கற் றோரை மதிக்குமன் னவனும் வாழி.

வே. முத்துஸாமி ஐயன்,
பிஏ. எல்டி.,
மதனப்பள்ளி.

———

உ

ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்களின் தேகவியோகத்தைக் குறித்து

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான் (மட்டுநகர்)

ச. பூபாலபிள்ளை சொல்லிய

இரங்கற்பாக்கள்

திருநிறைந்த மாமதுரைப் புகழ்வேந்த
ராதரிப்பத் திரண்டு பூத்திங்
குருவளர்ந்த தமிழ்மடந்தை யந்நாள்போ
லிந்நாளு முயர்வுற் றோங்கப்
புரைதவிர்ந்த கழகமொடு சங்கமுந
றூபித்துப் புரந்த பாண்டித்
துரைகரந்து விண்புகவே புவிமகள்போய்த்
துயர்க்கடலிற் றோய்கின் றாளே. (க)

என்னபவ மிழைத்ததுகொ லிப்பெரிய
தமிழகந்தா னிமையோர் வாழும்
பொன்னகர்முன் செய்ததவம் மிகப்பெரிதோ
புவனமிசைப் பொலிவில் லானைக்
கன்னலன மொழியானைக் கற்பகத்தின்
கொடையானைக் கல்வல் லானைப்
பன்னரிய புகழ்ப்பாண்டித் துரையரசை
யிழந்துபடும் பரிவே தையோ. (உ)

அனலடுத்த மெழுகினல மாந்துகுலைந்
துருகிமன மாறு நேயர்

புனலுகுப்ப விழிசுரந்து பசுப்பிரிந்த
கன்றெனவே புலம்பு மோதை
நினையடுத்துச் சுரரிசைத்த நீடொலியா
லவிந்ததுகொ னீகேட் டில்லாய்
வனமிகுத்த தவப்பாண்டித் துரையரசே
மட்புவிக்கோர் மணியே யன்னாய். (௫)

மதிமறைந்த வானகம்போன் மணமிழந்த
மாலிகைபோன் மணத்தார் சூட்டும்
பதியிழந்த பாவையர்போ லொளியிழந்த
பார்வையிற்பின் பழுது றும
னிதிபகுத்துத் தான்வகுத்த கழகமுதல்
யாவுநிலை பிறழா நிற்ப
விதிவகுத்த துரைபாண்டித் தேவனைப்போ
லறிவிலெவர் மிக்கா ரன்றே. (௬)

அறமிருந்தும் புகழிருந்து மழகிருந்தும்
பொருளிருந்து மறிந்த பன்னூற்
றிறமிருந்து மரும்பாண்டித் தேவருக்கென்
னுதவியவோ சினந்து காடி
மறமிருந்த நெஞ்சமொடு மறலிவரப்
புறம்பகற்று வகைவே றின்றிக்
கறையிருந்த மிடற்றிறைபாற் சரண்புகுந்தான்
விதிவலியுங் கடக்கற் பாற்றோ. (௭)

தாயினும்பல் லுயிரோம்பித் தமிழமுத
நலனூட்டித் தருமங் காத்திங்
கோயாமற் பொதுநலனுக் கென்றேத
னுரியவெலா முதவி யாண்டு

மாயாத புகழ்நிறுத்த மாபாண்டித்
துரைக்கிவண்கைம் மாறே தங்கன்
வீயாத முத்திநிலை யருள்செய்கெனப்
பணிந்தான்றாள் வேண்டு வோமே. (௬)

(கலித்துறை)

எல்லா நலனு முருவொன் றமைத்திங் கெழுந்தமுறை
பல்லோர் மகிழும் படிவந்த பாண்டித் துரைமகிபன்
நில்லா தகன்றன னென்பதென் னேயெவர் நெஞ்சகத்து
மல்லோ குடிபுக் கமர்ந்திருப் பானங் கனுதினமே. (௭)

(வெண்பா)

மண்ணிறையப் பேர்நாட்டி மாபாண்டித் தேவதுரை
விண்ணிறையச் சென்ற விதமென்னே—பண்ணிறைநற்
செந்தமிழின் சீரனைத்துந் தேவருக்குக் காட்டிவைக்கு
மந்தவிருப் பொன்றாலே யாம். (௮)

பொய்யுடலை நீத்துப் புகழுடம்பைத் தானிறுத்தி
மெய்யிடத்தை நாடி விசும்படைந்தான்—செய்யபுகழ்ப்
பால வனத்தன் பதநிலைப்பக் கொள்வானப்*
பால வனத்தன் பதம். (௯)

பால வனத்தம் பதிபுரந்த பாண்டியனு
ஞாலங் கடந்து நடந்தனனே—காலத்தி
னேர்ந்தனவு நேர்வனவு நின்மலனா ராட்டென்றே
தேர்ந்திருப்போஞ் சிந்தை தெளிந்து. (௧௦)

ச. பூபாலபிள்ளை.

19—3—12.

---

* அப்பால், அவன், அத்தன், பதம் கொள்வான்.

470

உ

பக்தி வைபவம்

பக்தி என்றால் என்ன?

பக்தி என்பது முளைகிளம்பும்பொழுதே வாசனையோடு முளைக்கும் திருத்துழாய்போல இயற்கையாய்ப் பகவானிடத்தில் ப்ரீதியுண்டாகி மனனகமலமறக்கழுவி உயர்வற உயர்நலமுடைய பிரானை உண்மையோடு விசாரித்து உபாசிப்பதுதான். அப்படி அவனைத் தேடி விசாரிப்பதின் ஆரம்பமும், தொடர்ச்சியும், முடிவும் பிரீதியையே ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. எவன் பகவானிடத்தில் ஒருக்ஷணகாலம் பரமபக்தியை இடைவிடாமற்செலுத்திப் பரவசத்தையடைகிறானோ அவன் நித்தியமான மோக்ஷநிலைமையை அடைகிறான். "பக்தியென்பது பகவானிடத்தில் செலுத்தும் அதிகப் பிரீதி என்று பக்திசூத்திரங்களின் வியாக்கியானத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவன் பக்திமானாகிறபொழுது சகலஜீவ ராசிகளிடத்திலும் அன்புள்ளவனாக இருக்கிறான். அவன் ஒன்றையும் துவேஷிக்கிறானில்லை. எப்பொழுதும் திருப்திகரமான மனதுடையவனாக ஆகிறான். இப்படிப்பட்ட பக்தி உலக அபேக்ஷைகளையாவது வேறு யாதாயினும் பிரயோஜனங்களையாவது ஆதாரமாகக் கொண்டிருக்கமாட்டாது. ஏனெனில் உலக இச்சைகள் உள்ளவரை அப்படிப்பட்ட பக்தி உண்டாகிறதில்லை. பக்தி கர்மத்தைக்காட்டிலும் அதிக மேலானது. யோகத்தைக்காட்டிலும் சிறந்தது. ஏனெனில், பின்சொல்லப்பட்ட இரண்டும் குறிப்பான ஒருகாரியத்தை முற்கொண்டிருக்கின்றன. பக்தியோவென்றால் தானாகவேயுண்டாகி இதர லக்ஷியம் ஒன்றும் நாடாமற் றன்னாலேயே அதின் முடிவை அடைகிறது. இப்படிப்பட்ட பக்தியே நமது பூர்வீக மகரிஷிகளின் ஸதாகாலகாலக்ஷேபமாக இருந்திருக்கிறது. பக்தியைப்பற்றித் தெளிவாய் எடுத்துச்சொல்லியிருக்கிற நாரதர் முதலான மகான்களைத் தவிர ஞானயோகத்தைப்பற்றி எழுதியிருக்கின்ற மகான்களாகிய வியாசசூத்திர மகாபாஷியகர்த்தர்களுங்கூட மிகவும் விஸ்தாரமாக

எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். வியாசசூத்திரங்களுள் எல்லாவற்றிற்கு மில்லாவிடினும் அவற்றிற்பெரும்பான்மைக்கு ஞானபாக அர்த்தமட்டிலும் அடங்கியிருப்பதாக எடுத்துச்சொல்ல வியாக்கியானகாரர்கள் முயன்றபோதிலும் பகவானைப் பூஜித்தலைப்பற்றி உபதேசிக்கும் அத்தியாய சூத்திரங்கள் அவ்விதமாகப் பக்தியைப்பற்றியில்லாமல் ஞானத்தைப்பற்றி மட்டிலும் எடுத்துச்சொல்லச் சுலபத்தில் இடம் கொடுக்கவில்லை.

ஜனங்கள் சிலவேளைகளில் எண்ணுவதுபோல் ஞானத்துக்கும் பக்திக்கும் வித்தியாசம் அவ்வளவாக இல்லை. நாம் இனி விசாரித்துப்பார்க்கப் பார்க்க அவைகளெல்லாம் கடைசியில் ஒன்றாக முடிவதைக்காண்போம். ராஜயோகமும் அவ்விதமாகவே பக்தி சாகரம் விழும் ஒரு நதியாய் முடிகிறது. கண்கட்டி வித்தைசெய்யும் ஜாலக்காரர்களையும் சண்டப்பிரசண்டர்களையும்போல் அந்நியர்களை மதிமயக்க உபயோகப்படுத்தாமல் மோக்ஷசாதன சித்தியின்பொருட்டு எவர்கள் ராஜயோகமுதலியவைகளை அனுஷ்டித்துவருகிறார்களோ அவர்கள் பக்தியோகத்தினால் அடையக்கூடும் அதே பரமபதத்தையே அடைகிறார்கள்.

பக்தியினால் நாம் அடையக்கூடிய ஒரு பெரிய பிரயோசனமென்னவெனில், பகவானை இந்தயோகத்தினால் மிகவும் அத்தியந்த சுலபத்தில் அடையலாம். இக்காரணம்பற்றியே "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரியவித்தகன்" எனப்பெரியாரும் பணித்திருக்கின்றார். இதுவே மிகவும் நேரான மார்க்கம். ஆனால் இப்பக்தியைக் கிரமமாக ஏற்பட்ட சரியானமார்க்கத்திற் செலுத்தாமல் துன்மார்க்கத்தில் விநியோகித்தலால் பயங்கரமான கிருத்தியங்களைச் செய்யும்படியான மதவைராக்கியமும், வெறியும், அடிக்கடி பலதடவைகளில் நேரிடுகின்றன. ஹிந்துமதத்திலாவது, மகம்மதீயமதத்திலாவது, கிறிஸ்தவமதத்திலாவது காணப்படும் மதவைராக்கியக்காரர்கள் பக்தியாகிய உன்னதபதவியில் தங்கள்மனதைப் பக்குவமடையச்செய்யாமற் கீழ்க்கடையான நிலைமைகளில் மனதைச் சஞ்சரிக்கவிட்டுப் பூஜிக்கிற ஜனக்கூட்டத்தின் சேர்க்கையாகவே எப்பொழு

தும் இருக்கிறார்கள். இது பக்தியினாலடையப்படும் துஷ்டபலமாகும். பிரீதிவைக்கப்படும் வஸ்துவினிடத்தில் எந்தமாதிரியான பிரேமையில்லாவிடில் உண்மையானபக்தி உண்டாகமாட்டாதோ அப்படிப்பட்ட விநோதமான அத்தியந்தப் பிரீதியாகிய நிஷ்டையானது மற்றெல்லாவிருப்பத்தையும் வெறுக்கச்செய்து அதன் மூலத்தையும் வேரறுக்க முக்கிய காரணமாக இருக்கிறது.

எந்த மதத்திலும் எந்தத் தேசத்திலும் உள்ள பலஹீனமான பக்குவமில்லாத மனதையுடையவர்கள் எல்லாரும் தங்கள் சொந்த மதக்கொள்கைகளை அன்புடன் கொண்டாடுவதற்கு ஒரேவழி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அந்நியமதக் கொள்கைகளைத் தூஷிக்கும் வழியேயன்றி வேறல்ல. தன்னுடைய சொந்த மதத்திற் சொல்லியபடிக்குள்ள பகவானையும், மதக் கொள்கைகளையும் அதிகப்பிரீதியுடன் எவன் கொண்டாடுகிறானோ அவனே அந்நியமதக் கொள்கைகளில் யாதாயினும் ஒன்றைப் பார்த்தமாத்திரத்திலாவது கேட்டமாத்திரத்திலாவது இக் காரணத்தை முன்னிட்டே மதவெறி கொண்டு கூச்சலிட ஆரம்பிக்கிறான். இப்படிப்பட்ட பக்தி தன்னெஜமானனுடைய வீட்டிலுள்ள சொத்துக்களை அந்நியர்கள் நுழைந்து எடுத்துக்கொண்டு போகாமலிருக்கும்படி காக்கும் இயற்கையறிவையுடைய ஒரு நாயின் பிரீதிக்குச் சற்றேறக்குறையச் சமானமாகவேயிருக்கிறது. இன்னும் யோஜிக்குமளவில் மனிதனுடைய பகுத்தறிவைக்காட்டிலும் நாயின் இயற்கையறிவே மேலானதாக இருக்கிறது. ஏனெனில் நாய் தன்னுடைய எஜமானன் எந்தமாதிரியான உடைகளைத் தரித்துக்கொண்டு மாறுவேஷம்பூண்டு தன்முன் வந்தாலும் உருமாறின காரணத்தை முன்னிட்டுச் சத்துரு ஒருவன் வருகிறான் என்று மதிக்காமல் தன் எஜமானன் என்றே தவறாமல் எப்பொழுதும் கண்டுகொள்ளும். மதவெறிகொண்டவன் பகுத்தறியுஞ் சக்திமுழுவதையும் இழந்துவிடுகிறான். ஒருவன் சரியாகச்சொன்னாலும் தவறுதலாகச் சொன்னாலும் அதை உள்ளபடி கவனித்துச் சீர்தூக்கிப்பாராமல் அப்படிச்சொன்ன மனிதர்களின் நிலைமைக்குத் தக்கபடி அபிப்பிராயங்களைக் கொள்ளுகிறான். இப்படிப்பட்ட சங்கதி யாரால் சொல்லப்பட்டது என்றுமட்டுந் தெரிந்துகொள்ள எப்போதும் கருத்துள்ளவனாக இருக்கிறான். தன்னுடைய சொந்தமத ஜனங்

களுக்கு அன்புள்ளவனாகவும், நல்லவனாகவும், யோக்கியனாகவும், பிரியுள்ளவனாகவும் இருக்கிறவனெவனோ அவனே தன்னுடைய மதஸ்தர்களல்லாத புறமதஸ்தர்களுக்கு விரோதமாய் ஏவப்படும்பொழுது கொஞ்சமேனும் யோசியாமல் கொடுஞ்செய்கைகளைச் செய்ய யத்தனிக்கிறான்.

ஆனால் இப்படிப்பட்ட அபாயம் பக்தியின் ஆரம்பகாலத்தில் மட்டிலும் ஏற்படுகிறது. பக்திமுதிர்ந்து பரபக்தி உண்டாகும்போது மேற்சொன்ன பயங்கரமான மதவைராக்கிய ஆரவாரங்கள் நிலைத்திருக்குமோ என்றபயமே இல்லை. இவ்வித பரபக்தியை அடைந்த ஜீவாத்மா பகவானுடைய அதிக சமீபத்திலிருப்பவனாகி இராகத்துவேஷத்தை விட்டுவிட்டவனாகிறான்.

இவ்வுலகத்தில் நாம் எல்லோரும் ஒரேவிதமான மாதிரியில் நடந்துகொள்ளவில்லை. ஆயினும் ஞானம், யோகம், பக்தி என்கிற இம்மூன்றுவிதமான மார்க்கங்களையும், அநுசரித்து நடக்கும் வழியே மிகச் சிறந்ததென்று அறிகிறோம். ஒரு பக்ஷிக்கு ஆகாயத்திற் பறக்கவேண்டியதின்பொருட்டு இரண்டு சிறைகளும் கப்பலைநடத்த வேண்டியமைக்குஞ்சுக்கான்போல ஒரு வாலும் அவசியம் வேண்டியிருக்கின்றன. இம் மாதிரியே மோக்ஷ இச்சையுள்ள ஒருவனுக்கு ஞானம் ஒரு சிறகாகவும், பக்தி மற்றொருசிறகாகவும், எளிதிற் பறக்க யோகம் ஒரு வாலாகவும் இருக்கிறது. இம் மூன்றுவித மார்க்கங்களையும் அநுசரிக்கமுடியாமல் பக்திமார்க்கத்தைமட்டும் அநுசரிக்கிறவர்கள், தர்மமார்க்கங்கள் முமுக்ஷுவுக்கு வேண்டிய தவசியமாயிருந்தாலும் அவைகளும் பரபக்தியைத்தவிர வேறொன்றையும் உண்டுபண்ணாதென்று எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அவசியம்.

பக்திமார்க்க, ஞானமார்க்க ஆசாரியரிருவர்களும் பக்தியின் வைபவத்தை ஒப்புக்கொண்டாலும் அவர்களுக்குள் சிறிது அபிப்பிராய பேதமுண்டு. ஞானிகள் பக்தியை மோக்ஷசாதனத்திற்குவேண்டிய கருவியென்று நினைக்கிறார்கள். பக்தர்கள் பக்தியை மோக்ஷ சாதனக்கருவியும் மோக்ஷபலப்ராப்தியும் என்று கருதுகிறார்கள். இப்படிப்பட்ட அபிப்பிராயபேதம் எனக்கு ஒரு வித்தியாசமாகவே

தோன்றவில்லை. ஆராய்ந்துபார்க்குமளவில் பக்தியை மோக்ஷ சாதனக் கருவியாக உபயோகித்துப் பகவானைப் பூஜிக்கிறபோது அதுவே ஆரம்பபக்தியாக ஆகிறது. இவ்விதமாக பகவத்தியானம் செய்து கொண்டே வந்தபிறகு ஆத்மஞானத்தை அடையும்படியான பரபக்தி நிலைமை உண்டாகிறது. ஆகையால் பக்தியின்பேரில் உண்டாகிற பரபக்திமேலான பதவியாவதோடுங்கூட ஒன்றையொன்று விட்டுப் பிரியாததாகவும் இருக்கிறது. பூர்த்தியான பரபக்தி ஞானம் இருக்கும்பொழுது பிரம்மஞானத்திலிருந்து பரபக்திஞானத்தைப் பிரிக்கமுடியாதென்பதையும் ஒவ்வொருவரும் ஞாபகத்தில்வைத்துக் கொள்ளவேண்டியது.

இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வேதாந்த மகாபாஷ்ய காரர்களான மகான்கள் இப் பக்தியைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று அறிய முயலுவோம். "தன் குருவினிடத்தில் ப்ரேமையுடையவனாகவும், அக் குருவையே தானடையவேண்டிய பலப்ராப்தி என்கிற ஒரே கருத்துடையவனாகவும் எவன் இருக்கிறானோ அவனையும், அதேவிதமாக ராஜனிடத்தில் பிரியமுள்ளவனையும் அவன் குரு பக்தியுள்ளவன் ராஜபக்தியுள்ளவன் என்று இவ்விதமாக ஜனங்கள் சொல்லுகிறார்கள்." என்று வியாசசூத்திரபாஷியம் சொல்லுகிறது. அம்மாதிரியே பிரியமுள்ள நாயகி பிரியமுள்ள நாயகனைத் தியானம் பண்ணுகிறாள் என்று சொல்லுகிறார்கள். இங்கு நாயகனைக் காலதேசத்திலும் பேதப்படாத ஒருமாதிரி யன்புடனே இடைவிடாது ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருத்தலைச் சொல்லுகிறது. பாஷியகாரர் அபிப்பிராயப்படிக்குள்ள பக்தி இதுவேயாகும்.

தியானம் என்பது ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொருபாத்திரத்திற்கு விடப்படும் இடைவிடாத தைலதாரையைப்போலத் தியானிக்கபட்ட வஸ்துவின்மேல் ஸதாகாலமும் ஞாபகம்வைத்திருத்தலேயாகும். இப்படிப்பட்டவிதமாகப் பகவானிடத்தில் ஞாபகம்வைத்துக் கொள்ளுதலை நாம் அடையும்பொழுது சகல பந்தங்களும் நிவிர்த்தியாகின்றன. இம் மாதிரியாகப் பகவானிடத்தில் ஸதாகாலமும் ஞாபகம் வைத்துக்கொண்டிருத்தலே மோக்ஷத்திற்கு உபாயங்கள் என்று சுருதிகள் முறையிடுகின்றன. இவ்விதமாகப் பகவானிடத்தில் ஞா

பகம் வைத்திருத்தலானது அவனைப் பிரத்தியக்ஷத்தில் தரிசிப்பதற்குச் சமானமாகிறது. ஏனெனில் "தூரத்திலும் சமீபத்திலும் எவன் இருக்கிறானோ அவனைத் தரிசிக்கிறபோது ஹிருதயத்திலுள்ள சகல பந்தங்களும் நிவிர்த்தியாகின்றன. சகல சந்தேக விபரீதங்களும் இல்லாமற்போகின்றன. சகல கர்மபலன்களும் ஒழிந்துவிடுகின்றன." என்கிற சுருதிவாக்கியங்களினால் தரிசனபலத்தை நாம் அறிகிறோம். "எவன் சமீபத்திலிருக்கிறானோ அவனைப்பார்க்கக்கூடும். ஆனால் எவன் தூரத்திலிருக்கிறானோ அவனை ஞாபகத்தில்மட்டிலும் வைத்துக்கொள்ளமுடியும். அப்படியிருந்தபோதிலும் சமீபத்திலுள்ளவனெவனோ அவனையும், தூரத்திலுள்ளவன் எவனோ அவனையும் நாம் பார்க்கவேண்டியிருப்பதாக வேதம்சொல்லுகிறது. இதனால் மேற்கண்டவிதமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வதே பிரத்தியக்ஷ தரிசனம்போலாகிறது" என்று சுருதியினால் அறிகிறோம்.

"இப்படி மனனம்பண்ணுதல் முதிர்ந்த தியானம் ஆகும்பொழுது அவனை நேரேபார்ப்பதாகவேயாகிறது. ஸதாகாலமும் மனனஞ்செய்தலே பூஜை" என்கிற விஷயங்களை வியாபகமான சுருதிவாக்கியங்களிற் காணலாம். "ஓயாது பூஜித்தலே அவனை அறிவதாகும். அவனை அறிதலே இடைவிடாது மனனஞ்செய்தலாகிறது" என்று சுருதிகள் முறையிடுகின்றன. இந்தப்பிரகாரம் பகவானைப் பிரத்தியக்ஷத்தில் தரிசிக்கும்படியான உன்னதபதவியுடைய மனோநிலைமையே மோக்ஷ உபாயம் என்று சுருதி உபதேசிக்கிறது. "நானாவிதமான சாஸ்திரங்களின் மூலமாகவாவது, புத்திவாயிலாகவாவது வேதங்களை அதிகமாகக்கற்பதினாலாவது கௌரவமடைந்த ஒருவனை இந்தப் பரமாத்மா அடைகிறானில்லை. எவன் பரமாத்மாவினிடத்தில் ப்ரீதியுள்ளவனாயிருக்கிறானோ அவனுடைய ஆத்மா இந்தப் பரமாத்மாவால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவனுக்கு மட்டிலுமே அந்தர்யாமியான பரமாத்மா தானாகவே பிரத்தியக்ஷமாகிறான். இந்தப்பரமாத்மா எவனை இச்சிக்கிறானோ அவனாலேயே அடையப்படுகிறான். என்றும் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவானிடத்தில் பரமபக்தியுள்ளவனே அவனால் இச்சிக்கப்படுகிறான். ஆகையால் இந்தப்பிரகாரம் பகவத்பக்தியுள்ளவன் பரமாத்மாவை யடையலாம். அவனுக்குப் பகவானே தன்னையடைய உதவிபுரிகி

ரூர். "என்னிடத்தில் இடைவிடாத பற்றுள்ளவர்களாகி என்னையே பக்தியுடன் எவர்கள் பூஜிக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு நானே அவ்வித மனோநோக்கத்தைக் கொடுக்கிறேன். அதனால் அவர்கள் என்னையடைகிறார்கள்" என்று தர்மஸம்ஸ்தாபனம் செய்யும் கிருஷ்ணபகவானே கீதைமூலம் நேரிற்சொல்லியிருக்கிறார். ஆகையால் இவ்விதமாக மனனஞ்செய்தல் எவனுக்கு அதிகப்பிரியமாயிருக்கிறதோ அப்படிப்பட்ட மனன தரிசனவஸ்துவுக்கு அது பிரியமாயிருத்தலை முன்னிட்டே அவன் பரமாத்மாவால் இச்சிக்கப்படுகிறான். அவனாலே இந்தப்பரமாத்மா அடையப்படுகிறான். இந்தப்பிரகாரம் ஞாபகத்தில் இடைவிடாது மனனம்பண்ணுதலே பக்தி என்று அறிகிறோம். இம்மாதிரியாகவே "பரமாத்மாவைப்பூஜிக்கிறதினால் விஷயபோகங்கள் முதலான பிரதிப்பிரயோஜனங்களை அபேக்ஷிக்காமல் எல்லாக்கர்மங்களையும் குருவுக்கெல்லாம் குருவான பரமாத்மாவுக்கு அர்ப்பணம்செய்கிறேன் என்று திரிகரணசுத்தியுடன் செய்யும் ஒருவித பக்தி" என்று பகவான் இராமாநுஜர் சூத்திரபாஷியத்தில் அருளிச்செய்திருக்கிறார்.

பரமபக்தனான பிரகலாதாழ்வானால் பக்தியின் இலக்ஷணம் மிகவும் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அவிவேகிகள் அநித்தியமான விஷயசுகபோகங்களில் அல்லும் பகலும் ஓயாது வைக்கும் அத்தியந்தப்பிரீதி உன்னை நான் தியானிக்கையில் உன்விஷயத்தில் என் ஹ்ருதயத்தை விட்டு எப்போதும் நழுவாதிருக்கவேண்டும்" என்று பிரகலாதாழ்வான் உருக்கத்துடன் சொல்லுகிறார். பிரீதியென்றால் யாரிடத்தில் இருக்கவேண்டிய பிரீதியென்பது ஆக்ஷேபம். பரமாத்மாவான ஈசுவரனிடத்தில் இருக்கவேண்டிய பிரீதியேயாகும். மற்ற எந்தவஸ்து எவ்வளவு வியாபகமாயிருந்தபோதிலும் அதின்மேல் பிரீதியைச் செலுத்துவது பக்தியாகமாட்டாது. ஏனெனில், பகவான் இராமாநுஜாசாரியார் தம்முடைய ஸ்ரீபாஷியத்தில் ஒரு பூர்விக ஆசாரியரின் வாக்கியத்தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லுவதில் "இவ்வுலகத்தில் பிரமாமுதல் புற்பூண்டுவரையிலும் உள்ள எல்லா ஜீவராசிகளும் கர்மாநுகுணமான ஜனனமரணங்களுக்கும் அடிமைகளாக இருக்கின்றன. ஆகையால் அவைகள் தியானயோக்கிய அருகமான வஸ்துக்களாக இருக்க உபயோகமுள்

ளவைகளல்ல. ஏனெனில், அவைகளெல்லாம் அவிவேகத்தோடு அநித்தியத்தைக்கொண்டு அடிக்கடி மாறுதலையுங்கொண்டிருக்கின்றன" என்று சொல்லியிருக்கிறார். பகவானுடைய சுபாவநிலைமையையும், மகிமையையும் அறியும் ஞானம்வந்தபிறகு உண்டாகிற ப்ரீதியென்று ஸ்வப்பனேசுவரர் என்ற வியாக்கியானகாரர் எழுதியிருக்கிறார். இப்படி இல்லாவிடில் மற்றெந்த வஸ்துவினிடத்திலும் வைக்கும் குருட்டுப்பிரீதியும் குழந்தைகளிடத்தில் உண்டாகும் வாத்ஸல்யமும், பக்தியாகிவிடுமல்லவா? ஆகையால் பக்தி என்பதற்கு

"பச்சைமாமலைபோல்மேனிபவளவாய்கமலச்செங்கண்
அச்சுதாஅமரரேறேஆயர்தங்கொழுந்தேயென்னும்
இச்சுவைதவிரயான்போய்இந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டேன்அரங்கமாநகருளானே".

என்றபடி ஆத்மஞானத்தையடையவேண்டி ஈசுவரனிடத்தில் ப்ரீதியோடே கூடின ஞாபகத்தைச் செலுத்தல்முதல் அவனிடத்தில் நாளடைவில் பெருக்கெடுத்துண்டாகும் பரமப்பிரீதிவரையிலும் படிப்படியாக அடையமுயன்று "மின்னின்நிலையிலமன்னுயிராக்கைகள்" என்று உணர்ந்து "அற்றதுபற்றெனில் உற்றதுவீடு" என்றபடி உலகப்பற்று முற்றும் ஒழித்து "காண்பனவும் கேட்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டும் கேட்டும்" நின்று, "உண்ணுஞ்சோறும் பருகும்நீருந் தின்னும்வெற்றிலையும் எல்லாம் கண்ணனெம்பெருமான்" என்று எண்ணி அச்சுதா, அநந்தா, கோவிந்தா என்னும் இத்தியாதி நாமங்களை உரைத்து நிற்கும் மனோநிலைமைகளே பக்தி என்பதின் மகிமையென நாம் அறிகிறோம்.

எவன் சூரிய சந்திர நக்ஷத்திராதிகளாகப் பிரகாசிக்கிறானோ அவனே இப் பிரபஞ்சமுழுவதுக்கும் பரமாத்மாவாக விளங்குகிறான். அவன் பிறப்பிறப்பில்லாதவன். சகல புவனங்களையும் பரிபாலனம் பண்ணுவதே அவனுக்குவேலை. அவன் சர்வஞ்ஞனையும் சர்வாந்தர்யாமியாயும் இருந்து இவ் வுலகமுழுவதையும் இரக்ஷிக்கிறான். ஆதியந்தமில்லாமல் நித்தியமாக இருக்கப்பட்ட லோகநாயகனும் அவனே. இப் பிரபஞ்சம் முழுவதையும் நித்தியமாக அரசுபுரியச் சக்தியுள்ளவன் அவனன்றி வேறு ஒருவரும் இல்லை. எவன்

இப்பிரபஞ்சசிருஷ்டி ஆரம்பகாலத்தில் பிரமாவை உண்டுபண்ணினுனே, அந்தப்பிரமாவுக்கு எவன் வேதத்தைப் புகட்டினுனே, எவன் தன்னுடைய கிருபாகடாக்ஷவீக்ஷண்ணிய வெளிச்சத்தினுல் ஆத்மாவை அறியும்படி செய்விக்கிருனே, அப்படிப்பட்ட தேஜோமயஞன தனிவஸ்துவை மோக்ஷத்தில் ஆசையுள்ளவனுகச் சரணுகதியடைகிறேன்.

வி. தி. ஸ்ரீநிவாஸையங்கார்,

மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை. } தமிழ்ப்பண்டிதர், 25—5—12.

௨

புத்தக வரவு.

சித்தாந்தம்:—இது சைவசித்தாந்த மஹா சமாஜத்தின் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. 1912ஞு ஜனவரிமாதத்து முதற்பகுதி கிடைத்தது. இதனை ஸ்ரீமத்-பூவை. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் பத்திராசிரியராகவிருந்து நடத்திவருகிருர்கள். இதிற் சைவசித்தாந்த சம்பிரதாயக்கோட்பாடுகளும் பிறவும் வெளியிடப்பெறுகின்றன. இதன் வருடச்சந்தா தபாற்கூலியுள்பட ரூ 1—4—0.

அம்பிகாபதியின் சரித்திரம்:—இது ரங்கோன் போஸ்டுமாஸ்டர் ஜெனரலாபீஸ் உத்தியோகஸ்தரான ஸ்ரீமான். ச. தாண்டவமூர்த்தி முதலியாரவர்களாற் கர்ணபரம்பரையாகப் பலரும் சொல்லிவரும் கதைகளையும் செய்யுள்களையுங்கொண்டெழுதப்பட்டது. இதன் விலை அணு 4.

☞ மேற்கண்ட புத்தகங்கள் பாண்டியன் புத்தகசாலையில் வழக்கப்படி சேர்க்கப்பட்டன.

ப—ர்.

கொணோசன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

கைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கொணோசன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கோரே நிமிர்ச்சியையும் தணிக்கிறது. இது தான் மிசவும் மேலான மருந்து. இது இரைக்குடரைத் தொந்தரவுசெய்யாமலும், அறுவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர குண்டிக்காய்க்குழியில் எரிச்சலுமுண்டுபண்ணுது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. 15-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது.

HOLY MULLER & SCHMIDT,

7, Colootola Street,

CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,

CHEMISTS,

MADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன். [6]

480

நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

பூரண ஆரோக்கியம்

என்பது யாதொரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கொடுக்கப்படுகிற எங்கள் 180 பக்கங்கொண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22 பிராட்வே மதிராஸ்.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

481

குந்தல கௌமதி.

என்னும் கூந்தலை வளர்க்கும் தைலத்தை இடைவிடாமல் உபயோகிப்பதினால் மயிர்க்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகள் நீங்கும். இது மயிருடன் சேர்ந்த கபாலத்தோலை ஜிலுஜிலுப்பாகவும், குளிர்ச்சியாகவும் செய்கிறது. மயிர்க்கால்களுக்கு ஊக்கமும் வளரும்சக்தியையும் ஏற்படுத்தி மயிரை மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கிறது.

பெரிய அளவு புட்டி 1-க்கு 12-அணா தபால் சார்ஜ் உள்பட ரூ 1- 3-0

ஷை ஷை 3-க்கு ரூ 2 ஷை ஷை ரூ 2-11-0

வேண்டுவோர், சென்னை ஏஜண்டுகளாகிய, எம். ஷாஹீயர்தயால் அண்டு கம்பேனி, 144—5, சினாபெஸார் ரோட்டு, சென்னைக்கு எழுதிக்கொள்ள வேண்டியது.

Kaviraj. R. C. Sen L. M. S.

கவிராஜ் ஆர். ஸி. ஸென். எல். எம். எஸ்.

216 Cornvallis Street,

காரன்வாலீஸ் தெரு,

CALCUTTA.

கல்கத்தா.

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

என் ஆயுர்வேத ஔஷதசாலையை பறங்கிபேட்டையிலிருந்து ஸ்திரமாக தஞ்சாவூருக்கு மாற்றியாய்விட்டது.

19. **சுகந்தஸ்நானப்பொடி**:—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அறிப்பு, சொரி, சிரங்கு, கற்றாழைநாற்றம், கைகால் எரிச்சல், மேககாங்கை, சரீரவரக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிபேகம், படர்தாமரை, மேகஊரல், கிரந்தி முதலிய, இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மீகரமும், ஆரோக்கியமு முண்டாகும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகம்.

20. **சஞ்சீவிமாத்திரைகள்**:—இம் மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5-பிரத்தியேகம்.

21. **கோரோஜனை மாத்திரைகள்**:-இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்கித்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம் முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால் மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும் கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு, முதலியதுகளும் மலைசுரம், முறைசுரம் முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணா 10. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5-பிரத்தியேகம்.

22. **கரப்பானுக்கும் சொரி சிரங்குக்கும் மருந்து**:—இம் மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும் சொரி, சிரங்கு, வரட்டுசொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும், தொந்திரவையும் தருகின்ற எவ்வித கரப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. சிலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

23. **கேசசுவாசனி**:—உசிதமான வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத் தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும், வளரும். கண்கள் குளிரும், தலைநோய்போகும், மூளையைப்பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. சிலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம். [5]

483

No. 3.

CHILDREN IN INDIA.

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

SCOTT's EMULSION

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAND.

(No. 1.)

CHAMBERLAIN'S PAIN BALM

உடம்பில் நோய்க்குச் சேம்பர்லேன் துரை செய்திருக்கு தைலம்.

முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால்

ஓய்ச்சல், தலைநோய், காயங்கள்,

இவைகளைத் தீர்க்கும்.

கீல்வாயுவையும், தீர்க்கும், தீர்க்கும், தீர்க்கும்.

கீல்வாய்வு என்றால் என்ன?

கீலுக்குக்கீல் வீக்கமும் வேதனையும், குத்தலும் குடைச்சலும் இழுப்பும் வலிப்பும். உட்காரமுடியாது, உறங்கமுடியாது.

இப்படியெல்லாம் இருந்தால், கீல்வாயுவுதான் என்று கொள்ளும்; தப்ப, சேம்பர்லேன் தைலத்தை வாங்கிக்கொள்ளும்.

நோவும் வீக்கமுமிருக்குமிடத்தில் தைலத்தைத் தேய்த்தவுடனே உள் எலும்புவரைக்கும் மருந்திறங்குவதை உணர்வீர். உடனே வேதனை குறையும். தைலத்தைத் தேய்த்துவர நாளடைவில் நோய் அடியோடு நீங்கும்.

இது முழுவதும் மூலிகை. கைபடாமல் செய்தது.

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்னபுட்டி ரூபா. 1. —— பெரிய புட்டி ரூபா. 2.